வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 19.04.2025 சனிக்கிழமை இதழ் : 110 பக்கங்கள் : 12




## பிள்ளையானின் சாரதியும் கைது!

மட்டக்களப்பு, ஏப். 19

பிள்ளையான் என்று அறியப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சரான சி. சந்திரகாந்தனின் சாரதியை சி. ஐ. டியினர் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு - வாழைச்சேனையில் வைத்து நேற்று வெள்ளிக்கிழமை பிள்ளையானின் சாரதியான ஜெயந்தன் கைது செய்யப்பட்டார்.

கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் 2006 டிசெம்பர் 15ஆம் திகதி கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கடந்த 8 ஆம் திகதி பிள்ளையான் அவரின் கட்சி பணிமனையில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இதையடுத்து, அவர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ்

11

### வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சபைகளுக்கு

# நிதி ஒதுக்கீடு வழங்கமுடியாதெனில் தனிநாட்டை தரும் முடிவை எடுங்கள்

## ஜனாதிபதி அநுரவுக்கு சிறீதரன் எம். பி. பதில்



கொழும்பு, ஏப்ரல் 19

**"வடக்கு, கிழக்கு மாகாணங்களின் உள்ளூராட்சி மன்றங்களில் தமிழ் அரசுக் கட்சி உட்பட தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள்தான் ஆட்சியமைக்கும். இங்குள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீட்டை வழங்க முடியாது என அரசாங்கம் கூறுமேயானால் எமக்கான தனிநாட்டை பிரித்துத் தருவதற்கான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிடின் அதனை முன்னிறுத்தி நாம் பொதுஜன வாக்கெடுப்பு ஒன்றுக்கு தயாராவோம் - இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்.**

மன்னார், யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க பிரசார கூட்டங்களில் வெளியிட்ட கருத்துகள் தொடர்பில் கருத்துரைக்கையிலேயே சிறீதரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், "தமது கட்சி ஆட்சி அமைக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கண்ணை மூடியவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். ஏனைய கட்சிகளின் முன்மொழிவுகள் நன்கு ஆராயப்படும் என்றும் ஜனாதிபதி வெளியிட்டிருக்கும் கருத்து அவரின் அறிவிலித்தனத்தைக் காண்பிக்கிறது. ஏனெனில், நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படு பவருக்கு ஒட்டுமொத்த மக்களும் வாக்களிப்பதில்லை. அவருக்கு வாக்களிக்காத எத்தனையோ பேர் இந்நாட்டில் இருக்கிறார்கள். அவ்வாறிருக்கையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறுவது எதேச்சதிகாரப் போக்கிலான ஓர் அராஜக செயல்பாடாகும். இது ஜனாதிபதியிடம் இருக்கும் இனவாதத்தின் மற்றொரு முகமாகும்.

இருப்பினும்,

11

# தமிழ் மக்களை நம்ப வைத்து கழுத்தறுக்க ஜே.வி.பி. முயற்சி!

## கஜேந்திரகுமார் எம். பி.

- சி. சிலக்சன், பு. கஜிந்தன் -

- அரசின் இனவாதமுகம் 6 மாதங்களில் வெளிப்பட்டுவிட்டது!
- திஸ்ஸ விகாரை சட்ட விரோதம் என்பதில் மாற்று கருத்தில்லை
- மக்கள் கேட்டால் போராட்டத்திலிருந்து விலக நாங்கள் தயார்!

யாழ்ப்பாணம், ஏப் 19

முன்னைய ஆட்சியாளர்கள் இனவாதத்தை வெளிப்படையாகவே காட்டினர். ஆனால், இவர்கள் (ஜே. வி. பி) அவர்களைவிட மோசமானவர்கள். தமிழ் மக்களை நம்பவைத்து தம் வசப்படுத்தி கழுத்தறுக்க முயற்சிக்கின்றனர் - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தையிட்டி விகாரை கட்டப்பட்ட விதம் சட்டவிரோதமே என்ற நிலைப்பாட்டில் எந்தவொரு தமிழ் அரசியல் கட்சியிடமும் மாற்றுக் கருத்து இருக்கப் போவதில்லை. அத்துடன், தமிழ் மக்கள் கூறினால் தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்திலிருந்து நாம் விலகுவதற்கு தயார் - என்றும் அவர் கூறியுள்ளார்.

நேற்றைய தினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கட்சி தலைமையகத்தில் அவர் நடத்திய ஊடக சந்திப்பி லேயே மேற்கண்டவாறு

11

## தந்தை செலுத்திய டிப்பரில் சிக்கி குழந்தை உயிரிழப்பு!

### கிளிநொச்சியில் சோகம்

கிளிநொச்சி, ஏப். 19

வீட்டில் நின்ற டிப்பர் வாகனத்தை தந்தை செலுத்திய போது அதன் சில்லுக்குள் அகப்பட்டு ஒன்றரை வயது குழந்தை உயிரிழந்தது.

கிளிநொச்சி - அம்பாள்குளம் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், வி. டர்சிகா

11

## ஜனாதிபதி தன் கருத்தின்மூலம் மக்களை அச்சுறுத்துகின்றார்!

### சித்தார்த்தன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 16

ஏனைய கட்சிகள் ஆட்சியமைக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு பலமுறை சிந்திப்போம் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கூறுவது மக்களை அச்சுறுத்துகின்ற நடவடிக்கை - என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

11

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

## ஜனாதிபதி அறிவிக்கவுள்ள சூத்திரதாரி யாரென அறிய ஆவல்!

### பொதுஜன பெரமுன கட்சி

கொழும்பு, ஏப். 19

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதார்ி நௌபர் மௌலவி. அரசியல் நோக்கத்துக்காக குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று எந்த விசாரணை அறிக்கையிலும் குறிப்பிடப்படவில்லை. ஜனாதிபதி கூறப்போகும் சூத்திரதாரி யார் என்பதை அறிய நாம் ஆவலாக உள்ளோம் என்று

11

## இனங்களிடையே சந்தேகத்தை ஜனாதிபதி ஏற்படுத்தக்கூடாது!

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஏப். 19

கிழக்கில் அடிப்படைவாத அமைப்புகள் இருக்குமானால் ஜனாதிபதி அது தொடர்பில் பகிரங்க மேடைகளில் பேசி இனங்களுக்கு இடையில் சந்தேகத்தை ஏற்படுத்தாமல் சட்டத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அத்துடன், கிழக்கு மாகாணத்தில்

11

## தேர்தல்கள் ஆணைக்குழு திங்கட்கிழமை கூடுகிறது

கொழும்பு, ஏப். 19

மன்னார் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கூறிய கருத்துகள் தொடர்பில் விசாரிப்பதற்காக நாளை மறுதினம் திங்கட்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழு கூடவுள்ளதாகத் தெரிய வருகிறது.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தேசியம் என்று மக்களின் இரத்தத்தை சூடேற்றி அதில் குளிர் காய்கின்றனர்!"

கிளிநொச்சி, ஏப். 19

தேசியம் என்று மக்களின் இரத்தத்தை சூடேற்றி அதில் குளிர் காய்ந்தார்கள். அதனை இன்றும் செய்கின்றனர் இவ்வாறு கூறியுள்ளார் கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர்.

தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி நகர கட்சி பணிமனையை நேற்று திறந்து வைத்த பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "கடந்த காலத்தில் அசுத்தப்படுத்திய அரசியல் கலாசாரத்தை இந்த மக்கள் சுத்தப்படுத்தியிருக்கிறார்கள். அது போல கீழ் மட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளையும் சுத்தப்படுத்த வேண்டும்.

இலஞ்ச, ஊழல் மோசடி இல்லாத வரலாறு புதியதோர் ஆட்சி மூலம் வந்துள்ளது. தேசியம் என்று மக்களின் இரத்தத்தை சூடேற்றி அதில் குளிர் காய்ந்தார்கள். அதனை இன்றும் செய்கின்றனர். கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து சபைகளையும் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு கையளிக்கவுள்ளனர் - என்றார். (ஐ)

# தனக்கு எதிரான செய்தி குறித்து மகிந்த சி. ஐ. டியில் முறைப்பாடு!

கொழும்பு, ஏப். 19

தனக்கும் தனது மகளுக்கும் எதிராக பரவி வரும் மிகவும் தவறான மற்றும் வன்மமான செய்தி தொடர்பில் தொழில் வாய்ப்புகள் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த செய்தியில் தனது மற்றும் தனது மகளின் படங்களைப் பயன்படுத்தி, கொழும்பில் உள்ள பிரபல உணவகம் ஒன்றில் தனது மகளின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டதாகவும் அது தொடர்பில் வன்மமான வார்த்தைப் பிரயோகங்கள் பகிரப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்ட பிரதி அமைச்சர், இதன் மூலம் தனக்கும், தனது அரசியல் இயக்கத்துக்கும் திட்டமிட்ட அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த செய்தி குறித்து உடனடி நடவடிககையை எடுக்க வேண்டும் என்றும் அவர் சி. ஐ. டியினரிடம் கோரியுள்ளார். (ஐ)

# தேசிய ஒலிம்பிக் குழுவை உடன் கலைக்க வேண்டும்!

## விளையாட்டுத்துறை அமைச்சரிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 19

தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் மற்றும் அதிகாரிகள் குழுவை உடனடியாக நீக்கி, அரசமைப்புக்கு அமைய புதிய அதிகாரிகள் குழுவை நியமிக்குமாறு தேசிய விளையாட்டு சங்கங்களின் தலைவர்கள் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒலிம்பிக் குழுவின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து நேற்று முன்தினம் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, தேசிய விளையாட்டு சங்கங்களின் தலைவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

சர்வதேச ஒலிம்பிக் குழுவால் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் நிதி நிறுத்திவைப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகள் தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

விசேட பொலிஸ் பாதுகாப்பின் கீழ் இந்த பொதுக் கூட்டம் (நேற்று முன்தினம்) மாலை 5.30 மணியளவில் ஆரம்பமானது.

சுமார் 27 உறுப்பு சங்கங்களின் பங்கேற்புடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கூட்டம், சுமார் ஐந்து மணி நேரம் நடைபெற்றது.

இரவு 9 மணியளவில் ஒலிம்பிக் குழுவின் தலைவர் திடீரென கூட்டத்தை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வடக்கு, கிழக்கில் இன்று வெப்பநிலை உச்சம் தொடும்!

கொழும்பு, ஏப். 19

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளில் இன்று சனிக்கிழமை வெப்பநிலை 45 பாகை செல்சியஸ் வரை நிலவ வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேற்கு, மேற்கு, தெற்கு மாகாணங்களின் சில பகுதிகளிலும், இரத்தினபுரி மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் வெப்பநிலை 39 முதல் 45 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும் என்று திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, சப்ரகமுவ, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலநறுவை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

சில இடங்களில் 50 மி.மீற்றருக்கும் அதிகமான கனமழை பெய்யக்கூடும் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# அநுரவின் மன்னார் உரை தேர்தல் விதிமுறை மீறல்!

## சுமந்திரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 19

"ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நேற்றுமுன்தினம் மன்னாரில் ஆற்றிய தேர்தல் பிரசார உரை தேர்தல் விதிமுறை மீறல் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்-

மன்னார் நகர சபைக்குத் தமது தேசிய மக்கள் சக்தியினரை மக்கள் தெரிவு செய்தால், அந்த நிர்வாகத்தின் திட்டங்களுக்குக் கண்ணை மூடிக் கொண்டு நாம் அங்கீகாரம் வழங்கி நிதி ஒதுக்கீடு செய்வோம். வேறு தரப்பிடம் நிர்வாகம் போனால் அவர்களின் திட்டங்கள் குறித்து ஒன்றுக்கு பத்துத் தடவை பரிசீலித்தே முடிவெடுப்போம் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அங்கு உரையாற்றி இருக்கின்றார்.

இந்த உரை அப்பட்டமான தேர்தல் விதிமுறை மீறலாகும். இது தொடர்பில் நாம் தேர்தல் ஆணையகத்திடம் உத்தியோக பூர்வமாக முறையிட இருக்கின்றோம்.

மக்களுக்கு இலஞ்சம் கொடுத்து வாக்குத் திரட்டும் சமயோசித பாணியே இந்த உரை. இதற்கு எதிராக நாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கக் கோருவோம் - என்றார். (அ)



புனித தந்ததாதுவை பொதுமக்கள் தரிசிப்பதற்காக சிறீ தலதா வழிபாடு கண்காட்சியை நேற்றைய தினம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தொடக்கி வைத்தார்.

# நயினாதீவில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஏப். 19

நயினாதீவு பிரதேச மருத்துவமனையில் இன்று சனிக்கிழமை மருத்துவ முகாம் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் கண் நோயியல் நிபுணர் தவிர்ந்த ஏனைய அனைத்து நோயியல் மருத்துவ நிபுணர்களும் பங்கு கொள்கின்றனர்.

இந்த சந்தர்ப்பத்தை அனைத்து மக்களையும் பயன்படுத்துமாறு நயினாதீவு பிரதேச மருத்துவமனையின் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (ஐ)

# கதிர்காமம் பாத யாத்திரை மே 01இல் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஏப். 19

கதிர்காமம் பாத யாத்திரை தொண்டைமானாறு செல்வ சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து எதிர்வரும் மே முதலாம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது என்று ஏற்பாட்டாளர் ஜெயா வேல்சாமி தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த பாத யாத்திரையில் பாடசாலை செல்லும் மாணவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் பங்குபற்ற முடியும். யாத்திரையில் பங்கேற்பவர்கள் பாதுகாப்பு கருதி தேசிய அடையாள அட்டையை கொண்டு வருதல் கட்டாயமானது. அத்துடன், பயணச் செலவும் பங்கேற்பாளருடையதே.

ஆலயங்களில் அன்னதானம் கிடையாதபட்சத்தில் சமைத்தே உணவருந்த வேண்டும். ஆண்கள் காவி வேட்டி, பெண்கள் காவி சேலை அணிதல் வேண்டும். ஆண்கள் மேலாடை அணிய அனுமதியில்லை. யாத்திரையில் பங்கேற்பவர்கள் மது அருந்துதல், புகைப்பிடித்தல், போதைப்பொருள் பாவித்தலை முற்றாக தவிர்க்க வேண்டும். அத்துடன், யாத்திரையில் பங்கேற்பவர்கள் ஆலயத்தில் சரியை தொண்டிலும் பஜனையிலும் பங்கேற்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களை அறிய விரும்புவோர் 077 838 6381, 076 308 4791 ஆகிய கைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும். (ஐ)

# சிறுவர்களுக்கான மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஏப். 19

சிறுவர்கள், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இலவச மருத்துவ முகாமும் விழிப்புணர்வு நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் வேலணை சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பற்சிகிச்சை முகாம், ஊட்டச்சத்துசார் விழிப்புணர்வு, பொது மருத்துவ முகாம் என்பன நடைபெறவுள்ளன. (ஐ)

# சிறீ தலதா வழிபாட்டில் பங்கேற்கும் சிறுவர்கள் ஓவியம் வரைய வாய்ப்பு

கொழும்பு, ஏப். 19

சிறீ தலதா வழிபாட்டில் பங்கேற்கும் சிறுவர்கள் ஓவியம் வரைவதற்கான வாய்ப்பை புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகார அமைச்சு ஏற்பாடு செய்து வழங்கியுள்ளது.

புத்த சாசன, மத மற்றும் கலாசார விவகார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, பிரதி அமைச்சர் கமகெதர திஸநாயக்க ஆகியோரின் பங்கேற்புடன் நேற்றைய தினம் இந்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒவ்வொரு நாளும் காலை 8.30 மணிக்கு கண்டி ரெஜின ஹோட்டல் முன்பாக ஆரம்பமாகும் இந்த நிகழ்வில், 450 சிறுவர்கள் ஓவியம் வரைய வசதி செய்யப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
19.04.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 06
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## வாக்குறுதிகளை வாரி வழங்கும் ஜனாதிபதி

"காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிந்து அதனை வெளிப்படுத்துவோம்", என்று சங்கிலியன் பூங்காவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின்போது, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்திருக்கிறார். அதேபோன்று, காணி விடுவிப்பு, வடக்கு மீனவர்கள் பிரச்னைகள், தையிட்டி விகாரை பிரச்னை என பல விடயங்களை தனது அரசாங்கம் தீர்த்து வைக்குமென்று தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வாக்குறுதிகள் வழங்குவது புதிய விடயமல்ல. ஜனாதிபதி தேர்தல் பிரசார காலத்திலிருந்து பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களை சட்டத்தின் முன்னால் கொண்டு வருவது என்பதும் அதில் ஒன்று. தற்போது பட்டலந்த விசாரணை என்பது புதிதாக சேர்ந்திருக்கும் விடயம்.

ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்து குறிப்பாக ராஜபக்ஷ குடும்பத்தின் ஊழல் விடயங்களை அம்பலப்படுத்துவது தொடர்பிலான வாக்குறுதிகளும் வழங்கப்பட்டிருந்தன. ஆனால், அதில் இதுவரையில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. விசாரணைகள் இடம்பெறலாம் ஆனால், சம்பந்தப்பட்ட பெரும் புள்ளிகள் கைதாவார்களா அல்லது சில பலிக்கடாக்களுடன் விடயங்கள் முடிந்து விடுமா என்பதுதான் கேள்வி.

யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்கள் கடந்து விட்டன. இந்தக் காலத்தில் இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல், போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூற முன்னைய ஆட்சியாளர்கள் மறுத்துவிட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் போர் குற்றங்களோடு தொடர்புபட்ட ஒன்றாகும். இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறிந்து மக்களுக்குக் கூறுவோம் என்று ஜனாதிபதி கூறுகிறார் - அதற்கான காலவரையறை என்ன? ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கு காலக்கெடு குறிப்பிடப்பட்டது போன்று ஏன் இறுதி யுத்தத்தின்போது, காணாமல் ஆக்கப்பட்டவர்கள், குறிப்பாக இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட, சரணடைந்தவர்கள் தொடர்பான விசாரணை தொடர்பில் காலக்கெடுவை வழங்க முடியவில்லை?

இந்த இடத்தில் தமிழ்க் கட்சிகள் மற்றும் தமிழ் சிவில் சமூகமாக தங்களை அடையாளப்படுத்திக் கொள்வோர் ஒரு விடயத்தை புரிந்து கொள்ள வேண்டும் - அதாவது, கர்தினால் மல்கம் ரஞ்சித் தொடர்ந்தும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகளை வெளியிடுமாறு கோரி வருகிறார்.

இது தொடர்பில் அவர் முன்னைய ஆட்சியாளர்களை விமர்சித்திருந்தார். இந்த நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மல்கம் ரஞ்சித்தையும் அவரின் தலைமையிலான கத்தோலிக்க சபையையும் திருப்திப்படுத்தும் நோக்கில் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

ஆனால், கடந்த பதினைந்து வருடங்களாக மனித உரிமைகள் மீறல் தொடர்பிலும், போர்க் குற்றங்கள் தொடர்பிலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் நீதி கோரி வருகின்றனர். இது தொடர்பில் களத்திலும் புலத்திலும் தமிழ்த் தேசிய தரப்புகள் என்போர் குரல் கொடுத்து வந்திருக்கின்றனர். ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் வழிகாட்டுதல்களும் அறிவுறுத்தல்களும் இருக்கின்றன.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் உண்மையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது இந்த விடயத்தைத்தான் முதலில் எடுத்திருக்க வேண்டும். ஆனால், அதனை கண்டுகொள்ளாமல் வெறுமனே வாக்குறுதிகளை மட்டுமே வழங்கிக் கொண்டிருக்கின்றனர். இதிலிருந்து தமிழ்த் தரப்புகள் எதனை கற்றுக்கொள்ள வேண்டும்? மல்கம் ரஞ்சித்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தில் ஒரு சிறிதளவு இடத்தைக்கூட, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நீதிக்கான குரல்களுக்கு கொடுக்கவில்லை. அவ்வாறாயின், பாதிக்கப்பட்ட மக்களின் சார்பிலான அழுத்தங்களை அரசாங்கம் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதுதானே பொருள்.

# பிள்ளையானின் சகா ஒருவர் சி.ஐ.டியில் சரணடைய தயார்!

### பொதுப் பாதுகாப்பு அமைச்சர் தகவல்

கொழும்பு, ஏப். 19

ஆட்கடத்தல் சம்பவம் ஒன்றுக்காக கைதுசெய்யப்பட்டு தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் நெருக்கமான சகா ஒருவர், தனது சுயவிருப்பின்பேரில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராகவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் ஆனந்த விஜய பால,

ஈஸ்டர் ஞாயிறு தினத் தாக்குதல்கள் குறித்த விசாரணையை குழப்பும் வகையில் கம்மன்பில செயற்படுகிறார்.

பிள்ளையானுடன் இணைந்து சட்டவிரோத செயல்பாடுகளில் ஈடுபட்ட ஒருவர் விசாரணைக்கு சுயமாகவே வருகிறார் என்றால் அவர்கள் இந்த விசாரணை



களில் இருந்து தப்பிக்க முடியாது என்பதை உணர்ந்திருக்கிறார்கள் - என்றார்.

(அ)

# மகிந்தவின் காலத்திலேயே கிழக்கு அபிவிருத்தி கண்டது

### நாமல் எம். பி. சொல்கிறார்

திருகோணமலை, ஏப். 19

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலேயே கிழக்கு மாகாணத்துக்கு பல்வேறு அபிவிருத்திகளை செய்து காட்டியுள்ளோம். தற்போது அனைத்து அபிவிருத்திகளும் இங்கு தடைப்பட்டுள்ளன. விசேடமாக திருகோணமலை மாவட்டத்துக்கு பெரும் அபிவிருத்தி திட்டங்களை செய்துள்ளோம் என்று பாராளுமன்ற உறுப்பினரும், சிறீ லங்கா பொதுஜன பெரமுன தேசிய அமைப்பாளருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மூதூர் தொகுதிக்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலில், சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் போட்டியிடும் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், எமது எதிர்கால ஆட்சியில், இந்த மாவட்டத்தின் அபிவிருத்திக்கு, முன்னுரிமை வழங்குவோம். திருகோணமலை மாவட்டம் அதியுச்ச அபிவிருத்திகளை மகிந்த ராஜபக்ஷ ஆட்சி காலத்திலேயே அடைந்தது. இதனை யாரும் மறுக்க முடியாது.



கிராமங்களை அபிவிருத்தி செய்கின்ற ஒரு தேர்தலை நாங்கள் எதிர்நோக்கி இருக்கின்றோம். சிறீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில், திறமையான, நேர்மையான இளைஞர், யுவதிகளை களமிறக்கி உள்ளோம். எனவே, உங்கள் கிராமத்துக்கு பொருத்தமான தலைவர்களை வாக்களித்து தெரிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்றார். (ஐ)

# சிகரெட்களுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஏப். 19

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 400 சிகரெட்களுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கண்டி - தலத்து ஓயா பகுதியில் வைத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். 70 வயதான சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழப்பு!

கல்முனை, ஏப். 19

வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர் மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை அம்பாறை - சம்மாந்துறை - செனவட்டை பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், சம்மாந்துறை, சென்னல் கிராமத்தை சேர்ந்த 27 வயது நபரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். உறவினர், வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**இடபம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

**மிதுனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். அமோகமான நாள்.

**கடகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**சிம்மம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமை கிடைக்கும். நன்மை கிடைக்கும் நாள்.

**கன்னி**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களைப் உதாசீனப்படுத்த வேண்டாம். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். பொறுப்புகள் அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மகரம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புது பொருள் வந்து சேரும். உத்தியோகத்தில் வைத்து உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும்.

**கும்பம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும்.

# உள்ளூராட்சி தேர்தலில் தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு முன்னாயத்த செயலமர்வு



யாழ்ப்பாணம், ஏப். 19

எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் தொடர்பில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான முன்னாயத்த செயலமர்வு யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான ம. பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது தலைமையுரை யாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர்,

உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் பொறுப்பாக நியமிக்கப்படும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் ஒவ்வொருவரும் வாக்களிப்பு நிலையங்களுக்குரிய முழுமையான பொறுப்பு மற்றும் அதிகாரம் கொண்டவர்களாக இருப்பதால் இந்தத் தேர்தலில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் பங்களிப்பானது மிகக் காத்திரமானது.

மேலும், கடந்த தேர்தலில்களில் கற்றுக்கொண்ட பாடத்தை அடிப்படையாகக்கொண்டு சில அசௌகரியங்கள் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு ஏற்பட்டிருந்தால் அவற்றை இம்முறை தவிர்த்து மென்மேலும் வினைத்திறனாக செயல்படுமாறு தெரிவித்தது டன், இம்முறை வட்டார ரீதியாக வாக்கெண்ணல் நடைபெறவுள்ளதால் தங்களுக்குரிய பொறுப்புக்களை உணர்ந்தும் அதற்கான ஒத்துழைப்பையும், ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களிலும் பார்வைக்குறைபாடுடைய வர்களுக்கான வசதிகளை அறிவுறுத்தல்களுக்கு அமைய மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ. சசீலன் விளக்கமளித்தார்.(எ-05)

# யாழில் 'காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்' நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஏப். 19

கிராமிய உழைப்பாளர் சங்கம் மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் மரியநாயகம் நியூட்டனின் "காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்" என்ற நூலின் அறிமுக நிகழ்வு இன்று 19 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். மாவட்ட செயலகம் அருகிலுள்ள வை. எம். சி. ஏ. மண்டபத்தில் காலை 10. 00 மணியளவில் நடைபெறவுள்ளது. இதில், விருந்தினர்களாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் பொதுச் செயலாளர் ஹேமன் குமாரா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய பெண்கள் திட்ட இணைப்பாளர் சுபாயினி கமலநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

(எ-05)

# காணிப் பயன்பாட்டு குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாண மாவட்ட காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர் பிரிவுகளில் பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டு குழுக்கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது டன், அவை தொடர்பான முடிவுகளும் எடுக்கப்பட்டன.

மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன், மாவட்ட காணிப் பயன்பாட்டு உதவிப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், கமநல அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள், நீர்ப்பாசன பொறியியலாளர், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் காணிப் பயன்பாட்டு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(எ)

# பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான செயல்பாட்டுக் குழு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 19

பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான செயல்பாட்டுக்குழுக் கலந்துரையாடல் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான செயல்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டது. குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், பிரதேச செயலகங்களுடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் [illegible] மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பதில் அரசாங்க அதிபரால் ஆராயப்பட்டு, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்டச் செயலாளர், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட, பிரதேச மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.(எ)

# மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் வீதியோட்டப் போட்டி இன்று 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 06. 00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. 15 வயதுக்குட்ட ஆண், பெண் போட்டியாளர்களுக்கு 7 கிலோ மீற்றர் தூரமும் 15 வயதுக்கு மேற்பட்ட போட்டியாளர்களுக்கு 21 கிலோ மீற்றர் தூரமும் வீதியோட்டம் இடம்பெறவுள்ளது.

பங்குபற்றும் போட்டியாளர்கள் மருத்துவச் சான்றிதழ் எடுத்துவருதல் அவசியமாகும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியை தயாரித்துக்கொண்டிருக்கிறது அரசு

### பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 19

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு இன்னும் சில தினங்களில் 6 வருடங்கள் பூர்த்தியாகவுள்ளன. அதனை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் இதற்கு முன்னர் வாக்குறுதிகளுக்கு மேல் வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறது. வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் தற்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியை அரசாங்கம் தயாரித்துக் கொண்டிருக்கிறது என பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-சரியான விசாரணைகளை முன்னெடுத்து உண்மையான குற்றவாளிகளை இனங்காண்பதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது. அதனால் தான் பிரதான சூத்திரதாரியைக் கைது செய்வதை காலம் தாழ்த்திக் கொண்டிருக்கின்றனர். பிள்ளையான் என்பவர் யுத்தத்தை நிறைவு செய்வதற்கு பாரிய ஒத்துழைப்புக்களை வழங்கிய ஒருவராவார்.

கடந்த காலங்களில் அவர் தவறிழைத்திருந்தாலும் அவற்றுக்கு மன்னிப்பு வழங்கக்கூடிய அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. யுத்தத்தை நிறைவு செய்வதற்கு ஒத்துழைத்தவர்கள் அதற்கு முன்னர் தவறிழைத்திருந்தால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகள் அரசியலமைப்பில் உள்ளன.

அந்த வகையில் யுத்தத்தை நிறைவு செய்ய ஒத்துழைப்பு வழங்கிய பிள்ளையான் தேசப்பற்றாளராவார். அவ்வாறான நபர் 2006 யுத்த காலத்தில் இடம்பெற்ற சம்பவமொன்றை அடிப்படையாகக் கொண்டு கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

மறுபுறம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் அவரை பிரதான சூத்திரதாரியாக தயாரிப்பதற் கான முயற்சிகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. நீதிமன்றத்துக்கு முன்னிலைப்படுத்தாமல் பிள்ளையானை தடுத்து வைத்து விசாரிப்பதற்கு உத்தரவு பெறப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. என்றார். (அ)

## ஈஸ்டர் தாக்குதல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தபோது இடம்மாற்றம்

### தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் ஜனாதிபதிக்கு கடிதம்



கொழும்பு, ஏப். 19

**இலங்கையின் தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் அசங்க அபயகுணசேகர 2019 இல் தான் இடமாற்றப்பட்டமை குறித்தும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த தனது ஆராய்ச்சிகள் தடுக்கப்பட்டமை குறித்தும் சுட்டிக்காட்டி ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்**

2019 ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சிலிருந்து காரணம் தெரிவிக்கப்படாமல் உடனடியாக தான் இடமாற்றப்பட்டதைக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள அவர், இலங்கையின் தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் என்ற அடிப்படையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த முக்கியமான ஆய்வொன்றில் ஈடுபட்டிருந்த வேளை தான் இடமாற்றப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

தனது இடமாற்றம் திட்டமிடப்பட்ட விதம் அரசியல் தலையீடுகள் குறித்தும் நிறுவன சமரசம் குறித்தும் தீவிரமான கேள்விகளை எழுப்புகின்றது என தெரிவித்துள்ள அவர், என்னை ஜேர்மனியின் பேர்ளின் துணை தூதரகத்துக்கு நியமிப்பதாக தெரிவித்திருந்தார்கள் எனவும் அதுவும் இடம்பெறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னால் உள்ள உண்மைகள் அதிகாரத்துவ குழப்பம் மற்றும் அரசியல் நோக்கம் காரணமாக புதைந்துபோகக் கூடாது என தெரிவித்துள்ள அசங்க அபயகுணசேகர, தனது திடீர் இடமாற்றம் குறித்து நீதி நிலைநாட்டப்பட்டால் தான் நாட்டிற்காக அர்ப்பணிப்புடன் நேர்மையுடன் பணியாற்ற தயாராகயுள்ளேன், உத்தியோகபூர்வ வேண்டுகோள் விடுக்கப்பட்டால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கு வேன் என தெரிவித்துள்ளார்.

(அ)

## இஸ்ரேலின் நடவடிக்கைக்கு எதிராக நீர்கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்



கொழும்பு, ஏப். 19

பலஸ்தீனத்துக்கு எதிரான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை நீர்கொழும்பு தெல்வத்தை சந்தியில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

"பெரிய வெள்ளிக்கிழமை அர்த்தமுள்ளதாக்குவோம் " என்ற தொனிப் பொருளில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தை "கித்துசர " அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

18 மாத காலமாக தொடரும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகவும் அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு எதிரான பதாதைகளை ஏந்தி அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

கத்தோலிக்க, இஸ்லாமிய மதத் தலைவர்கள் மற்றும் மூவின மக்களும் ஆர்ப்பாட் டத்தில் கலந்து கொண்டனர்.

(அ)

## இந்த ஆண்டில் இதுவரை டெங்கினால் 5 பேர் பலி!

### 14,678 பேர் பாதிப்பு

கொழும்பு, ஏப். 19

டெங்கு காய்ச்சல் காரணமாக இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 5 பேர் உயிரிழந்ததோடு, 14,678 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதில், அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலேயே பதிவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

தற்போது நாட்டில் டெங்கு நோய்ப் பரவல் அதிகரித்து வருவதனால் இவ்வார இறுதியில் பிராந்திய மட்டத்தில் டெங்கு ஒழிப்புத் திட்டச் செயற்பாடுகளைப் பாடசாலைகளில் முன்னெடுக்கவுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் 2024ஆம் ஆண்டில் மொத்தமாக 49,870 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(அ)

## சிறிலங்கன் எயார்லைன்ஸ் பணியாளர்கள் போராட்டம்!

கொழும்பு, ஏப். 19

சிறிலங்கன் எயார்லைன்ஸ் கேபின் பணியாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் ஆரம்பித்துள்ளனர்.

விமானத்தில் உணவு கொடுப்பனவை மறு ஒதுக்கீடு செய்வது உள்ளிட்ட பல கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதாக சிறிலங்கன் எயார்லைன்ஸ் கேபின் பணியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த விவகாரம் தொடர் பாக சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிர்வாகத்துக்கு பலமுறை தகவல் தெரிவித்துள்ளதாக தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

## இந்தியாவுடனான ஒப்பந்தத்தை உடன் வெளிப்படுத்தவேண்டும்!

### இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

கொழும்பு, ஏப். 19

இந்தியாவுடன் செய்து கொண்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்த வேண்டுமென அனைத்து ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகளும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்குமாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

இது தொடர்பில் கம்யூனிஸ்ட் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அரசாங்கம் எந்தவித வெளிப்படைத் தன்மையும் இல்லாமல் 'இக்வொட்' உறுப்பு நாடான இந்தியாவுடன் பாதுகாப்பு தொடர்பில் ஒப்பந்தம் செய்துகொள்ள எடுத்த தீர்மானம் குறித்து எமது கவலையையும் எதிர்ப்பையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒரு பக்கத்தில் அரசாங்கம் செய்துகொண்டுள்ள இந்த பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பில் நாட்டுக்குள் முறையான கலந்துரையாடல் அல்லது பாராளுமன்றத்தில் விவாதம் இல்லாமல் அனுமதித்துக் கொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் மூலம் நாட்டுக்குள் புதிய பணிப்போர் ஒன்றை மற்றும் இந்து சமுத்திரத்தில் இராணுவமயமாக்கும் சந்தர்ப்பத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற எயார் மார்ஷல் எச்.எஸ். சம்பத் துய்யகொந்தா மற்றும் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோருக்கிடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் கை மாற்றப்பட்டது.

இந்திய ஊடகங்களுக்கமைய வலயத்தில் சீனாவின் இருப்புக்கு எதிராக போராடுதல் இந்தியாவின் உத்திகளின் ஒரு பகுதியாக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கை இந்தியாவின் பாதுகாப்புக்கு அதே போன்று வலயத்தின் ஸ்திரத் தன்மைக்கு எந்த வகையிலும் பாதிப்பாக எமது பூமியை பயன்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிப்பதில்லை என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்திய பிரதமர் மோடிக்கு உறுதியளித்திருந்தார்.

இது தொடர்பில் எமக்கு எந்தவித எதிர்ப்பும் இல்லை. என்றாலும் வலயத்தின் ஸ்திரத்தன்மை தொடர்பில் இந்தியாவின் அர்ப்பணிப்பு தொடர்பில் கேள்வி எழுகிறது.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு சென்றுள்ளதன் மூலம் இலங்கை இந்தியாவின் காலனித்துவ அரசாங்கமாக பின்கதவு வழியாக இழுபட்டு செல்வதன் மூலம் உண்மையான அச்சுறுத்தல் இருக்கிறது. இலங்கை பல நூற்றாண்டு காலமாக பின்பற்றிவந்த பிளவுபடாத வெளிநாட்டுக் கொள்கையை தொடர்ந்தும் செயற்படுத்தும் என நம்ப முடியாமல் இருக்கிறது.

இந்த நிலைமையில் இந்தியாவுடன் செய்துகொண்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று அனைத்து ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகளும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கின்றோம்-என்றுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்கள் ஆணைக்குழு அரசியல் மயப்பட்டுள்ளதா?

## பத்தரமுல்ல சீலரத்ன தேரர் கேள்வி



கொழும்பு, ஏப். 19

தேர்தல்கள் ஆணைக்குழு அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக, ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார். கொலன்னாவ பகுதியில் நேற்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தேசிய மக்கள் சக்திக்கு உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரம் வழங்கப்படாவிட்டால் அவற்றுக்கு நிதி ஒதுக்க முடியாது என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க கூறியுள்ளார். இது தவறான கூற்றாகும்.

அவ்வாறாயின் தேர்தல்கள் ஆணையாளர் இது குறித்து ஏன் கருத்து வெளியிடவில்லை.

ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட அனைவரும் அமைதியாக இருக்கின்றனர். தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் இது குறித்து வாய் திறக்கவில்லை.

ஏராளமான உறுதி மொழிகளை வழங்கியே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியமைத்தது. எனினும் இதுவரை காத்திரமான எந்தவொரு செயற்றிட்டமும் முன்னெடுக்கப்படவில்லை.

இப்போது பிள்ளையான் பற்றியே அதிகம் பேசப்படுகிறது. நாட்டில் உள்ள ஏனைய முக்கியமான விடயங்கள் மறைக்கப்பட்டுள்ளன.

அரசியல் நாடகங்களை தவிர்த்து முறையான ஆட்சியை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்-என்றார். (அ)

# துப்பாக்கிகளுடன் இருவர் கைது !

கொழும்பு, ஏப். 19

நாடளாவிய ரீதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வெளிநாட்டுத் துப்பாக்கி மற்றும் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சமனலவெவ பொலிஸ் பிரிவின் பலித்துவவ பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.கைது செய்யப்பட்ட சந்தேகநபர் முல்கம பகுதியைச் சேர்ந்த 31வயதுடையவராவார்.

இதேவேளை, பிபில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹாமாபொல பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வெளிநாட்டு துப்பாக்கி மற்றும் 08 தோட்டாக்களுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். (அ)

# சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறால் மோ. சைக்கிள் தீக்கிரை!

கொழும்பு, ஏப். 19

சகோதரர்கள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக 10 லட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் தீக்கிரையாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் மாலை 6 மணிக்கு ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை பகுதியில் உள்ள சுரங்கத்தை அண்டிய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இரு சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட வாய் தர்க்கம் சண்டையில் முடிந்து இருவரும் படுகாயங்களுடன் கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

# கலபொட நீர்வீழ்ச்சியில் நீராடிய இளைஞன் மாயம்

கொழும்பு, ஏப். 19

நாவலப்பிட்டி - கலபொட நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனே இவ்வாறு காணாமல் போயுள்ளார். காணாமல் போன இளைஞர் அவரது 4 நண்பர்களுடன் குறித்த நீர்வீழ்ச்சிக்குச் சென்றுள்ளார். இவர்கள் கலபொட நீர்வீழ்ச்சியின் பிரதான நுழைவாயிலில் முறையான அனுமதி பெறாமல், நீர்வீழ்ச்சியைப் பார்வையிடச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் காணாமல் போன இளைஞன் நீர்வீழ்ச்சிக்கு அருகிலுள்ள பாதுகாப்பற்ற இடத்தில் மூழ்கிக் காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 100 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்குச்சீட்டுகள் அச்சிடும் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

கொழும்பு, ஏப். 19

நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பாக நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்பட்ட 100 இற்கும் மேற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான உத்தியோக பூர்வ வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அரச அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான அஞ்சல்மூல வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள் நேற்று முன் தினம் ஆரம்பிக்கப்பட்டதாக அரச அச்சகமா அதிபர் பிரதீப் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்காளர் அட்டைகளை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னதாக தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை 17 மில்லியன் வாக்காளர்களுக்கும் 64 இலட்சம் வீடுகளுக்கும் விநியோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுமார் 71,000 வேட்பாளர்கள் போட்டியிடும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர் வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெற உள்ளது. (அ)

# இவ்வாண்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 8 இலட்சத்தை கடந்தது

கொழும்பு, ஏப். 19

2025 ஆம் ஆண்டில் இது வரை நாட்டிற்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 816,191 ஆக அதிகரித்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.ஏப்ரல் மாதத்தின் முதல் 15 நாட்களில், 93,915 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக அந்த தரவுகள் மேலும் தெரிவிக்கின்றன.

ஏப்ரல் மாதத்தின் முதல் 15 நாட்களில் அதிகபட்ச சுற்றுலாப் பயணிகள் ஏப்ரல் 12 ஆம் திகதி வருகை தந்துள்ளதுடன் அன்று 7,585 பேர் வருகை தந்தனர்.இந்த காலகட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளதுடன் அதன் எண்ணிக்கை 18,220 ஆகும்.

அதற்கு அடுத்த படியாக அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 11,425 பேரும், ரஷ்யாவிலிருந்து 8,705 பேரும், ஜேர்மனியிலிருந்து 7,746 பேரும் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். (அ)

# நிகழ்நிலை காப்புச் சட்டத்தை மாற்றீடு செய்வதற்கு சட்டமூலம்

கொழும்பு, ஏப். 19

2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டத்தை மாற்றீடு செய்வதற்கான சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி இந்த புதிய சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் நிகழ்நிலை காப்புச் சட்டம் ரத்து செய்யப்படும் என குறித்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பான ஏதேனும் விதிமுறைகள் நடைமுறையிலிருந்தால், புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் அந்த விதி முறைகள் அனைத்தும் ரத்தாகும் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# எலிக் காய்ச்சல் பரவும் அபாயம்!

## பொதுமக்கள் அவதானம்

கொழும்பு, ஏப். 19

நாட்டில் எலிக் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

விசேடமாகப் புத்தாண்டு காலப்பகுதியில் வயல்வெளிகளுக்கு அருகில் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காய்ச்சல், தலைவலி, தசை உளைவு, மூட்டுகளில் வலி, சருமம் எரிச்சல் போன்றவற்றுடன் வாந்திபேதி, தசை வீக்கம் என்பனவும் எலிக்காய்ச்சலின் ஆரம்ப அறிகுறிகளாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியரை நாட வேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

# பணம் மற்றும் தங்க நகைகளுடன் கான்ஸ்டபிள் உட்பட 6 பேர் கைது !

கொழும்பு, ஏப். 19

தெவுந்தர - ஹம்மன வீதியில் மூன்றரை கோடி ரூபாய் பணம் மற்றும் தங்க வளையல்கள், காதணிகள் உட்பட 150 கிராம் தங்கம் என்பவற்றுடன் மேல் மாகாண பொலிஸ் புலனாய்வுத் தலைமையகத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் மேலும் ஐவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

அதன்படி, வாகனத்தை நிறுத்தி சோதனை செய்யும்போது வாகனத்தின் பின்புறம் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இவை கைப்பற்றப்பட்டன.

தெவுந்தர பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த அதிகாரிகள், ஹம்மான வீதியில் வேகமாகச் சென்ற வாகனத்தை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளனர்.

இந்த சோதனையின் போது, சந்தேகத்திற்குரிய ஐந்து பேர் பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகளால் பணம் மற்றும் தங்க ஆபரணங்களுடன் கைது செய்யப்பட்டனர்.

மேல் மாகாண புலனாய்வுத் தலைமையகத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே காரை ஓட்டிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையின்போது பொலிஸ் உத்தியோகத்தர் வழங்கிய வாக்குமூலங்களில் முரண்பாடுகள் காணப்படுவதாக விசேட அதிரடிப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். போதைப்பொருள் விற்பனையில் கிடைத்த பணத்தை பகிர இவர்கள் எடுத்துச் சென்றார்களா என்பது குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் மீது மக்களின் ஆர்வம் குறைவு!

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 19

**எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரச்சாரங்கள் தொடங்கியதிலிருந்து எந்தவொரு பாரதூரமான சம்பவங்களும் பதிவாகவில்லை என்று தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மீதான பொதுமக்களின் ஆர்வமும் குறைவாக உள்ளதாகவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

அரசு சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் தனிப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்ததாக 20 முறைப்பாடுகளும், தனிப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக 15 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

உளளூராட்சி மன்றத் தேர்தல்கள் மீதான பொதுமக்களின் ஆர்வமும் குறைவாக இருப்பதாக பவ்ரல் கண்காணிப்பாளர்களும் தமக்குத் தெரிவித்ததாக அதன் நிர்வாகப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கூறினார்.

PAFFREL

இதற்கிடையில், தேர்தல்கள் பணிகளுக்காக சுமார் 4,000 கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தபால்மூல வாக்குகளிப்புகளை கண்காணிக்க 200 கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# உயிர்த்த ஞாயிறை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

கொழும்பு, ஏப். 19

உயிர்த்த ஞாயிறான நாளை கிறிஸ்தவ தேவாலயங்களில் வழிபாட்டுக்காக கலந்து கொள்பவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் நடைபெற்ற விசேட கூட்டத்தின் போதே முப்படைத் தளபதிகளுக்கு பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தா இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் பாதுகாப்பான சூழலைப் பேணுவதற்கும் சிறந்த பாதுகாப்பை வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகளை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளுமாறும் பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் போது ஏற்பட்ட இடையூறு மற்றும் துயரம் மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் அமைதியான மற்றும் பாதுகாப்பான சூழலில் பொதுமக்கள் உயிர்த்த ஞாயிறு வழிபாடுகளில் கலந்து கொள்வதை உறுதி செய்வதே பிரதான நோக்கம் என்று பாதுகாப்புச் செயலாளர் மேலும் வலியுறுத்தினார்.

இதற்கு அமைவாக உயர்த்த ஞயிறு தினத்தை முன்னிட்டு மத அனுஷ்டானங்களை நடத்தும் தேவாலயங்களுக்கு சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளை இலங்கை பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அதன்படி, நேற்று வெள்ளிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பக்தர்கள் மற்றும் பொது மக்களின் பாதுகாப்புக்காக சிறப்பு பொலிஸ் பாதுகாப்பை செயல்படுத்துமாறு பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய அறிவுறுத்தியுள்ளார்.

இந்தக் காலகட்டத்தில் அதிக மக்கள் கூடும் தேவாலயங்களைக் கண்டறிந்து, அப்பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு பொலிஸாருக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படை மற்றும் முப்படை வீரர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். (அ)

# 24 மணித்தியாலங்களில் எட்டு குற்றச் செயல்கள்!

கொழும்பு, ஏப். 19

தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 19 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவினால் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் தேர்தலுடன் தொடர்புடைய எட்டு குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளதாகவும், வேட்பாளர் ஒருவர் உட்பட இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மார்ச் மூன்றாம் திகதி முதல் இன்று காலை வரை 184 குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அவ்வாறான குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 63 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 15 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அஹுங்கல்லவில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, ஏப். 19

அஹுங்கலவில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு முன்னால் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு ஓட்டோவில் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

லக்ஷான் மதுஷங்க என்ற 28 வயதான இளைஞர் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. அவரின் இடுப்புப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டு காயம் ஏற்பட்டுள்ளது. இந்த துப்பாக்கிச்சூடு பிஸ்டல் ரக துப்பாக்கியால் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தேர்தல் சட்டத்தை மீறிய 19 வேட்பாளர்கள் கைது!

கொழும்பு, ஏப். 19

தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 19 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவினால் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் தேர்தலுடன் தொடர்புடைய எட்டு குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளதாகவும், வேட்பாளர் ஒருவர் உட்பட இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மூன்றாம் திகதி முதல் நேற்று காலை வரை 184 குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அவ்வாறான குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 63 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 15 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஏற்றுமதி வருமானத்தை உயர்த்தும் மாற்று வழி குறித்து தீவிர கவனம்!

கொழும்பு, ஏப். 19

அமெரிக்காவின் வரிப்போரால் இலங்கையின் ஏற்றுமதி துறையில் ஏற்படும் வருமான பற்றாக்குறையை, பிற நாடுகளின் சந்தைகள்மூலம் ஈடுசெய்வதற்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்று ஏற்றுமதி அபிவிருத்தி சபைத் தலைவர் மங்கள விஜேசிங்க தெரிவித்தார்.

ஆசிய வலயம், ஆபிரிக்க நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கை பொருட்களுக்கு அதிக கேள்வி இருப்பதாகவும் அவர் கூறினார்.

இதற்கமைய மேற்படி நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை செய்துகொள்வதற்குரிய முன்மொழிவுகள், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் வரி விதிப்பால் உலக பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் இலங்கைக்கு நன்மைகளைப் பெறுவதற்குரிய வழிமுறைகள் பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் கூறினார். (அ)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலுடன் தொடர்புள்ள 1,490 முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப். 19

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தொடர்புடைய சம்பவங்கள் தொடர்பில் ஆயிரத்து 490 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுதெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் 20ஆம் திகதி முதல் இதுவரை பதிவாகியுள்ள குறித்த முறைப்பாடுகளில் வன்முறை தொடர்பில் 9 முறைப்பாடுகளும், சட்டத்தினை மீறியமை தொடர்பில் ஆயிரத்து 388 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. கிடைக்கப்பெற்ற ஆயிரத்து 490 முறைப்பாடுகளில் ஆயிரத்து 319 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகவும் ஏனைய முறைப்பாடுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# உணவு அருந்த சென்றவர்கள் மீது ஹோட்டல் ஊழியர்கள் தாக்குதல்!

## 6 பேர் பொலிஸாரினால் கைது

கொழும்பு, ஏப். 19

காலியில் உள்ள முன்னணி ஹோட்டலுக்குச் சென்று உணவு முன்பதிவு செய்த ஒரு குழுவை கொடூரமாகத் தாக்கிய சம்பவம் தொடர்பாக காலி பொலிஸ் நிலையத்திலேயே முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட குடும்ப உறுப்பினர்கள் கொழும்பிலிருந்து காலிக்கு விடுமுறைக்காகச் சென்று இரவு உணவுக்கு இந்த ஹோட்டலுக்குச் சென்றிருந்தபோது இந்த சம்பவம் நிகழ்ந்தது.

இந்தக் குழு நேற்றுமுன்தினம் இரவு உணவை முன்பதிவு செய்து சுமார் 30 நிமிடங்களுக்குப் பிறகு உணவு தீர்ந்துவிட்டதாக ஹோட்டல் பொறுப்பாளர் கூறியுள்ளார்.

அப்போது அங்கிருந்தவர்கள், "உணவு இல்லை என்று தெரிவிக்க 30 நிமிடங்கள் ஆனதா?" என்று கேள்வி கேட்டுள்ளனர்.

அப்போது இரு தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில் ஹோட்டல் ஊழியர்கள் அவர்களைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

ஹோட்டலில் சுமார் 30 பேர் தங்களைத் தாக்கியதாக தாக்குதலுக்கு இலக்கானவர்கள் கூறியுள்ளனர்.

தம்மை தாக்குவதாக கூறிய தகவலைத் தொடர்ந்து, அவர்களது குடும்ப உறுப்பினர்களில் மற்றொரு குழு உடனடியாக சம்பவ இடத்துக்கு பிரவேசித்துள்ள நிலையில் அவர்களையும் ஹோட்டல் ஊழியர்கள் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த எதிர்பாராத சம்பவத்தால் 28 வயது இளைஞனுக்கு தலையில் காயம் ஏற்பட்டதுடன், 17 வயது சிறுவனுக்கு கண்ணில் காயம் ஏற்பட்டது.

அத்துடன் 14 வயதுச் சிறுவன் ஒருவனும் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் குறித்து தற்போது விசாரணை நடத்தி வருவதாகவும், மோதலுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் உணவகத்தைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் பற்றிய உண்மைகளை ஓரிரு தினங்களுக்குள் வெளிப்படுத்துக!

## அரசாங்கத்திடம் ரிஷாட் பதியுதீன் எம். பி. வலியுறுத்தல்



திருகோணமலை, ஏப்.19

மக்களின் எதிர்பார்ப்பான ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான உண்மைகளை ஓரிரு தினங்களுக்குள் அநுர அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

திருகோணமலை நிலாவெளியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "தேர்தல் காலத்தில் அரசாங்கம் சொன்னதை போன்று செயல்பட வேண்டும். அநியாயமான முறையில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டும். குச்சவெளி பிரதேசத்தில் ஒன்று பட்டு ஒற்றுமையாக வாக்களித்தால் மக்கள் காங்கிரஸ் அதிகளவான உறுப்பினர்களை பெறும். தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமை ஊடாக பிரதேச சபை ஆட்சியை அமைக்கலாம்- என்றார். (எ)

# வேட்பாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம்



சம்மாந்துறை, ஏப். 19

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சம்மாந்துறை பிரதேச சபைக்கு கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம் கடந்த 16 ஆம் திகதி புதன்கிழமை மாலை சம்மாந்துறை பொலிஸ் நிலைய கேட் போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் சம்மாந்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி எச். ஜெயலத் வழிகாட்டலில் சம்மாந்துறை பிரதேச சபைத் தேர்தல் நடவடிக்கைக்கான பொறுப்பதிகாரி எம். நௌபர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, 2025 உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பின்பற்ற வேண்டிய சட்டங்கள், பொலித்தீன் பாவிப்பது தொடர்பில் தெளிவூட்டல், சட்டவிரோதமாக தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுதலை தவிர்த்தல், தலைக் கவசமின்றி மோட்டார் சைக்கிள்களில் பயணித்து தேர்தல் பிரசாரம் செய்வதை தவிர்த்தல், சட்டவிரோதமாக ஊர்வலம் செல்வதை தவிர்த்தல், சட்டவிரோத ஒலிபெருக்கி பாவனையை குறைத்தல் தொடர்பான தெளிவூட்டல்களை பொறுப்பதிகாரி நௌபர் வழங்கினார். (எ)

# சாய்ந்தமருது சமுர்த்தி வங்கியில் கடன் வழங்கும் திட்டம் ஆரம்பம்

சாய்ந்தமருது, ஏப். 19

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சமுர்த்தி வங்கியால் தொழிலை மேம்படுத்துவதற்கான அதிகப்படியான கடன் வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது, லக்ஜே திட்டத்தின் மூலம் சுமார் 10 இலட்சம் ரூபாய் பணத்தை தொழிலை மேம்படுத்தி, அத்தொழிலை சிறப்பாகக் கொண்டு செல்வதற்காக வழங்கப்பட்டது.

அந்தவகையில், சாய்ந்தமருதைச் சேர்ந்த தச்சுத்தொழிலாளி மீரா முகைதீன் பஸீல் என்பவர் தனது தச்சுத்தொழிலை மேம்படுத்துவதற்காக இவ்வாண்டின் முதலாவது அதிகப்படியான கடன் திட்டத்தைப் பெற்றார்.

சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் எம். ஐ. சம்சுதீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ. நஜீம் மற்றும் சமூர்த்தி வங்கி முகாமையாளர் எஸ். ஹிதாயா, சமுர்த்தி வங்கி சங்க முகாமையாளர் எம். றியாத், வலய உதவி முகாமையாளர் எம். நௌஷாத், சமூர்த்தி வங்கி காசாளர் எம். அன்லைஸ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த மீளாய்வுக் கூட்டமும் சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ. நஜீம் தலைமையில் நடைபெற்றது. (எ)

# வவுணதீவில் வாள்வெட்டு தாக்குதல்; பெண் உள்ளிட்ட இருவர் படுகாயம்!

## சிறைச்சாலை உத்தியோகத்தர் மடக்கிப் பிடிப்பு

வவுணதீவு, ஏப். 19

வவுணதீவு கொத்தியாவல பிரதேசத்தில் 3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட "கோபு" வாள் வெட்டுக் குழுவினர் வீடொன்றில் நுழைந்து தாக்குதல் நடத்தி அட்டகாசம் செய்ததில் பெண் ஒருவர் உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்ட குழுவைச் சேர்ந்த சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரை அங்கிருந்தவர்கள் மடக்கிப் பிடித்து கட்டி வைத்ததுடன் ஏனைய குழுவினர் மோட்டார் சைக் கிளை கைவிட்டு தப்பியோடியுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடொன்றில் சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வரும் ஒருவர் அந்த பணத்தை வைத்து வவுணதீவு பிரதேசத்தில் "கோபு ரீம்" என்ற வாள்வெட்டு குழு ஒன்றை இயக்கிவருவதுடன் அந்தக் குழுவினர் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கொத்தியாவல பிரதேசத்திலுள்ள சது என்பவருடன் முன்விரோதம் காரணமாக அவர் மீது தாக்குதல் நடத்த கோபு வாள்வெட்டு குழுவைச் சேர்ந்த 6 பேர் 3 மோட்டார் சைக்கிள்களில் அவ ரின் வீட்டை தேடிச் சென்றனர். அவர் வீட்டுக்கு அருகிலுள்ள காணியில் மாடுகளை கட்டிக் கொண்டிருந்த போது அவர் மீது தாக்குதல் மேற்கொண்டதையடுத்து அவர் அங்கிருந்து தப்பியோடி அருகிலுள்ள அவரது மாமனார் வீட்டில் தஞ்சமடைந்துள்ளார்.

இந்த நிலையில் வாள் வெட்டு குழுவினர் அங்கு சென்று வீட்டினுள் நுழைந்து அங்கிருந்த பொருட்களை அடித்து சேதப்படுத்தி தாக்குதலை மேற்கொண்டதில் சது மற்றும் அவரது மாமியார் படுகாயமடைந்தனர்.

இதே வேளை, வாள் வெட்டு தாக்குதல் மேற் கொள்ளச் சென்ற சிறைச்சாலை உத்தியோகத்தரை மடக்கி பிடித்து கட்டிவைத்து பொலிஸாருக்கு அறிவித்தனர்.

கட்டிவைத்த சிறைச்சாலை உத்தியோகத்தரை வாள்வெட்டுக் குழுவினர் மீட்டு கொண்டு மோட்டார் சைக்கிளை அங்கு விட்டுவிட்டு தப்பி ஓடினர். அதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் 3 மோட்டார் சைக்கிள்களையும் கொண்டு சென்றதுடன், தாக்குதலில் காயமடைந்தவர்களை மட்டு. போதனா மருத்துவமனையில் சேர்த்ததுடன் தாக்குதலை மேற்கொண்டவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுத்து வருவதாக தெரிவித்தனர்.

இதேவேளை,

குறித்த வாள் வெட்டுக் குழுவினர் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கசிப்பு உற்பத்தி செய்பவர்கள் தொடர் பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியவர் என ஒருவரின் வீட்டுக்கு வாள்களுடன் சென்று அவர் மீது தாக்குதல் நடத்திய சம்ப வம் தொடர்பில் கைது செய் யப்பட்டு சிறையில் அடைக் கப்பட்டு நீதிமன்ற பிணையில் அண்மையில் வெளியில் வந்துள்ளதாகவும் இவர்கள் தொடர்ந்து இப் பிரதேசத்தில் செய்துவரும் அட்டூழியங்க ளால் மக்கள் பயப் பீதியில் உள்ளனர். (எ)

# வீதி அபிவிருத்தி அமைச்சின் பதில் செயலாளராக பைஷல்



மட்டக்களப்பு, ஏப். 19

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்து, கட்டடங்கள் மற்றும் நிர்மாணம் அமைச்சின் பதில் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள எம். பைஷல் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வந்த எம்.நஸீர் கடந்த 11 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்தே, கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக கடமையாற்றி வரும் பைஷல் அப்பதவிக்கு மேலதிகமாக வீதி அபிவிருத்தி அமைச்சின் பதில் செயலாளராக கடமையாற்றும் பொருட்டு கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவால் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையிலேயே கடந்த 16 ஆம் திகதி பைஷல் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள், மாகாண திணைக்களத் தலைவர்கள், அமைச்சின் உயர திகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

### அன்னை பூபதியின் நினைவு தினம்

# சிவில் சமூக செயல்பாட்டாளருக்கு பொலிஸாரினால் அழைப்பாணை

மட்டக்களப்பு, ஏப். 19

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் ச. சிவயோகநாதனுக்கு மட்டக்களப்பு, கொக்குவில் பிரதேச பொலிஸாரினால் விசாரணைக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 04. 25 மணிக்கு இவரது வீட்டுக்குச் சென்ற பொலிஸார் இன்று 19 ஆம் திகதி காலை 09.00 மணிக்கு காத்தான்குடி பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு காத்தான்குடி மற்றும் கொக்குவில் பொலிஸாரால் கையொப்பமிடப்பட்ட அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

அதில், சிங்கள மொழியில் மட்டும் எழுதப்பட்டுள்ளது. எனவே, இதன்மூலம் தனது மொழி உரிமை மீறப்பட்டுள்ளது என சிவயோகநாதன் தெரிவித்தார்.

அன்னை பூபதியின் நினைவு தின நிகழ்வுகள் மட்டக்களப்பில் நடைபெறவுள்ள நிலையில் இந்த விசாரணைகள் தொடங்கியுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் காஸாவில் 23 பேர் உயிரிழப்பு!

காஸா, ஏப்.19

**காஸாவின் கான் யூனுஸ் பகுதியில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய சரமாரி தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் உட்பட 23 பேர் உயிரிழந்தனர்.**

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் காலாவதியான நிலையில் காஸா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. பணயக் கைதிகளை மீட்கவும் ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக ஒழிக்கும் நோக்கிலும் காஸா முனையில் இஸ்ரேல் தொடர்ந்து தரைவழி, வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்த போரில் பலஸ்தீனத்தை சேர்ந்த அப்பாவி பொதுமக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். 2 ஆண்டுகளுக்கு மேல் நீடித்து வரும் போரில், காஸாவில் இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 51 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு காஸாவின் கான் யூனுஸ் பகுதியில் இஸ்ரேல் இராணுவம் சரமாரித் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில், ஒரே குடும்பத்தை சேர்ந்த 10 பேர் உட்பட 23 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

# கொங்கோவில் படகு விபத்து: 50 பேர் ஆற்றில் மூழ்கிப் பலி!

பிராசவில்லி, ஏப். 19

கொங்கோவில் படகு விபத்தில் 50 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் வடமேற்கு பகுதியில் மடான் குமு துறைமுகம் உள்ளது. இந்தத் துறைமுகத்திலிருந்து போலோம்பா பகுதிக்கு ஒரு மோட்டர் படகில் 400இற்கும் மேற்பட்டோர் பயணம் மேற்கொண்டனர். பன்டாக்கா பகுதியில் படகு சென்று கொண்டிருந்த போது படகில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. படகில் பயணம் செய்தவர்கள் தீ விபத்திலிருந்து தப்பிக்க ஆற்றில் குதித்தனர். இதேவேளை, படகு ஆற்றில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் சிக்கி 50 பேர் உயிரிழந்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த மீட்புப் படையினர் 100இற்கும் மேற்பட்டவர்களை மீட்டனர். காணாமல் போனவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. படகில் பெண் ஒருவர் சமையல் செய்த போது தீ விபத்து ஏற்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (எ)

# "இந்துக்களிலிருந்து நாம் வேறுபட்டவர்கள்"

## பாக். இராணுவ தளபதி அசிம் முனீர்

இஸ்லாமாபாத், ஏப்.19

வாழ்வின் ஒவ்வொரு அங்கத்திலும் நாம் இந்துக்களில் இருந்து வேறுபட்டவர்கள் என்று பாகிஸ்தான் தலைமை இராணுவத் தளபதி அசிம் முனீர் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் புதன்கிழமை நடைபெற்ற வெளிநாட்டுவாழ் பாகிஸ்தானியர்களின் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"வாழ்வின் ஒவ்வொரு அங்கத்திலும் நாம் இந்துக்களில் இருந்து வேறுபட்டவர்கள் என்று நமது முன்னோர்கள் நம்பினார்கள். நமது மதம் வேறு, பழக்க வழக்கங்கள் வேறு, மரபுகள் வேறு, நமது சிந்தனைகள், நோக்கங்கள் வேறு. இங்கிருந்து தான் இரு நாடுகள் கொள்கைக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது. நாம் இரண்டு வேறு நாடுகள், ஒரே நாடு அல்ல.

நமது முன்னோர்கள் மகத்தான சாதனைகளைச் செய்துள்ளனர். மேலும், இந்த நாட்டை உருவாக்க நாம் நிறைய தியாகங்களைச் செய்துள்ளோம். இதை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்று நமக்குத் தெரியும். பாகிஸ்தானின் கதையை ஒருபோதும் மறக்காதீர்கள். உங்களின் அடுத்த தலைமுறைக்கு பாகிஸ்தானின் கதையைச் சொல்ல மறக்காதீர்கள்"- என்றார். (எ)

# பெருவின் முன்னாள் ஜனாதிபதிக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை!



லிமா, ஏப். 19

பண மோசடி வழக்கில் பெரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதிக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தென் அமெரிக்க நாடான பெருவின் முன்னாள் ஜனாதிபதி ஒல்லாண்டா ஹூமாலா. இவர் 2006 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின்போது நாடு முழுவதும் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது, ஹூமாலாவின் தேசிய ஜனநாயக கட்சி தேர்தல் பிரசாரத்துக்காக அப்போதைய வெனிசுலா ஜனாதிபதி ஹியூகோ சாவேசிடமிருந்து இலங்கை மதிப்பில் சுமார் 8 கோடி ரூபாய் வரை நன்கொடை பெற்றதாக குற்றச்சாட்டு எழுந்தது. அதேபோன்று பெருவின் ஓடெபிரெக்டிட் என்ற தனியார் கட்டுமான நிறுவனத்திடமிருந்தும் நன்கொடை பெற்றதாக கூறப்படுகிறது.

இதுதொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ஒல்லாண்டா, அவரது மனைவி ஹெரேடியா ஆகியோர் மீது தலைநகர் லிமாவில் உள்ள நீதிமன்றில் பண மோசடி வழக்கு நடைபெற்று வந்தது. இந்த வழக்கின் விசாரணையில் அவர்கள் மீதான குற்றச்சாட்டு உறுதியானது. எனவே, இவர்கள் இருவருக்கும் தலா 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கியது. இதனையடுத்து ஒல்லாண்டா உடனடியாக சிறையில் அடைக்கப்பட்டார்.

இதற்கிடையே அவரது மனைவி ஹெரேடியா பெருவில் உள்ள பிரேசில் தூதரகத்தில் தஞ்சம் கோரியிருந்தார். அங்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில் அவர் தனது மகனுடன் விமானம் மூலம் பிரேசில் தப்பிச் சென்றுள்ளார். மேலும், இந்த தண்டனையை எதிர்த்து ஒல்லாண்டா ஆதரவாளர்கள் மேல்முறையீடு செய்யவுள்ளனர். (எ)

# செல்வாக்கு மிகுந்தவர்களின் பட்டியலில் ட்ரம்ப் முன்னிலை



வாஷிங்டன், ஏப். 19

உலகின் செல்வாக்கு மிகுந்தவர்கள் பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்னிலை வகிக்கிறார்.

சர்வதேச அளவில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியவர்கள், ஏற்படுத்தக் கூடியவர்கள், பிரபலங்கள் என 100 பேரை ஒவ்வொரு ஆண்டும் பிரபல ஆங்கில பத்திரிகையான டைம் இதழ் வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான பட்டியல் வெளியாகியுள்ளது. இதில், 2025 ஆண்டுக்கான உலகின் செல்வாக்கு மிகுந்த தலைவர்கள் பட்டியலில் இந்தியர்கள் யாரும் இடம்பெறவில்லை.

இந்தப் பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பங்களாதேஷ் இடைக்கால அரச தலைவர் முகம்மது யூனுஸ், டெஸ்லா நிறுவன தலைமை அதிகாரி எலான் மஸ்க் உள்ளிட்டவர்கள் இடம் பெற்றுள்ளனர். (எ)

# அரசியல் கைதிகள் 22 பேர் உட்பட 4,900 பேர் மியன்மாரில் விடுதலை



நய்பிடாவ், ஏப். 19

பர்மிய புத்தாண்டை முன்னிட்டு சிறையில் உள்ள அரசியல் கைதிகள் 22 பேர் உட்பட 4,900 பேருக்கு மியன்மார் இராணுவ அரசின் தலைவர் மின் ஆங் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார்.

மியன்மாரில் கடந்த 2021ஆம் ஆண்டிலிருந்து இராணுவ ஆட்சி நடைபெறுகிறது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் ஆங் சான் சூகி சிறையில் அடைக்கப்பட்டார். மியன்மார் தற்போது உள்நாட்டுப் போரை சந்தித்து வருகிறது. இந்த நிலையில் கடந்த மாதம் 28ஆம் திகதி ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 3,725 பேர் உயிரிழந்தனர். பாரம்பரிய கட்டடங்கள் எல்லாம் இடிந்தன. நிலநடுக்கம் பாதித்த பகுதிகளில் விரைவில் மறுவாழ்வு பணிகள் மேற்கொள்ளப்படும் என இராணுவத் தலைவர் உறுதியளித்துள்ளர்.

இந்த நிலையில் அங்கு பர்மிய புத்தாண்டு திங்யான் கடந்த 13ஆம் திகதி முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. மியன்மாரில் புத்தாண்டு விடுமுறையில் சிறைக் கைதிகள் விடுவிக்கப்படுவது வழக்கம். இதன்படி, அரசியல் கைதிகள் 22 பேர் உட்பட 4,900 பேருக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்க இராணுவ ஆட்சியாளர் மின் ஆங் உத்தரவிட்டார். வெளிநாட்டு கைதிகள் 13 பேரும் விடுவிக்கப்பட்டு, அவர்களது நாட்டுக்கு அனுப்பப்படுகின்றனர். விடுவிக்கப்பட்டவர்கள் மீண்டும் சட்டத்தை மீறினால், அவர்கள் புதுத் தண்டனையுடன் பழைய வழக்கில் மீதமுள்ள தண்டனையைச் சேர்த்து அனுபவிக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

கொடிய குற்றங்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தவிர மற்றவர்களுக்கு தண்டனை குறைக்கப்பட்டது. யங்கூன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களை சிறை வாசலில் குடும்பத்தினர் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

ஆங் சான் சூகி உட்பட அரசியல் கைதிகள் 22,197 பேர் இன்னும் மியன்மார் சிறைகளில் உள்ளனர். மியன்மாரில் புத்தாண்டு விடுமுறையிலும், இராணுவத்துக்கும், ஜனநாயக ஆதரவு படையினருக்கும் இடையே மோதல்கள் தொடர்ந்து நடைபெற்று வரு கின்றன. ஆனால், உயிரிழப்பு எண்ணிக்கை தெரியவில்லை. (எ)

# அண்ணாமலைக்கு புதிய பதவி?



சென்னை, ஏப். 19

பா.ஜ.க. தேசிய இளைஞர் பிரிவு தலைவராக அண்ணாமலை நியமிக்கப்படவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவின் தமிழகம் உட்பட நாடு முழுவதும் பா.ஜ.கவின் உட்கட்சி தேர்தல் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதுவரை கிளைத் தலைவர், மண்டல தலைவர், மாவட்ட தலைவர் பதவிகளுக்கு தேர்தல் நடத்தப்பட்டு, புதிய நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே தமிழக பா.ஜ.க. மாநில தலைவர் பதவிக்கான தேர்தலும் நடைபெற்றது. இதில், பா.ஜ.கவின் தமிழக சட்டமன்ற குழு தலைவர் நயினார் நாகேந்திரன் மாநில தலைவராக தெரிவு செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து கடந்த 12ஆம் திகதி தமிழக பா.ஜ.க. தலைவராக நயினார் நாகேந்திரன் பொறுப்பேற்றுக்கொண்டார். இதையடுத்து பா.ஜ.க. தலைவராக கடந்த 4 ஆண்டுகளாக பதவி வகித்து வந்த அண்ணாமலைக்கு தேசிய பொறுப்பு வழங்கப்பட்டது.

இந்த நிலையில், பா.ஜ.க. தேசிய இளைஞர் பிரிவு (யுவமோர்ச்சா) தேசிய தலைவராக அண்ணாமலை அறிவிக்கப்பட வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அசத்தல் வெற்றி!

மும்பை, ஏப். 19

4 விக்கெட்கள் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். தொடரின் 18ஆவது சீசன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 33ஆவது லீக் ஆட்டத்தில் முன்னாள் சம்பியன்களான மும்பை இந்தியன்ஸ்-சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின.

இதில் ஹைதராபாத் அணியின் சார்பில் அபிஷேக் சர்மா மற்றும் ட்ராவிஸ் ஹெட் ஆகியோர் களமிறங்கினர்.

முதல் ஓவரின் முதல் பந்திலே அபிஷேக் சர்மா கொடுத்த வாய்ப்பை மும்பை அணியினர் தவறவிட்டனர்.


இந்த நிலையில் சிறப்பாக ஆடி வந்த அபிஷேக் சர்மா 40 (28) ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய இஷான் கிஷன் 2 ஓட்டங்களில் வெளியேற, அவரைத்தொடர்ந்து ஓரளவு தாக்குப் பிடித்த ட்ராவிஸ் ஹெட் 28 (29) ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக நிதிஷ் குமார் ரெட்டியுடன், ஹென்ரி கிளாசன் ஜோடி சேர்ந்தார். ஓரளவு ஓட்டங்கள் சேர்த்த இந்த ஜோடியில் நிதிஷ் குமார் ரெட்டி 19 ஓட்டங்களில் வெளியேறினார். அடுத்து அதிரடி காட்டி வந்த ஹென்ரி கிளாசன் 37 (28) ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 162 ஓட்டங்கள் எடுத்தது.

மும்பை அணியின் சார்பில் அதிகபட்சமாக வில் ஜாக்ஸ் 2 விக்கெட்களும், ஹர்திக் பாண்டியா, பும்ரா மற்றும் போல்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். இதனைத் தொடர்ந்து 163 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை அணி களமிறங்கியது.

அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய ரயான் ரிக்கெல்டன் - ரோஹித் சர்மா ஜோடி அணிக்கு நல்ல தொடக்கத்தை அமைத்துக் கொடுத்தது. 3 சிக்ஸர்களை விளாசிய ரோஹித் சர்மா, 26 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.



ரியான் ரிக்கெல்டன் 31 ஓட்டங்களும், வில் ஜாக்ஸ் 36 ஓட்டங்களும் சேர்த்த நிலையில், சூர்யகுமார் யாதவ் அதிரடியாக விளையாடி 15 பந்துகளில் 26 ஓட்டங்கள் எடுத்தார். ஹர்திக் பாண்டியா 9 பந்துகளில் 21 ஓட்டங்கள் விளாசினார். நிதானமாக ஆடிய திலக் வர்மா 21 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

17ஆவது ஓவரின் முடிவில் மும்பை அணி வெற்றி பெற 2 ஓட்டங்கள் மட்டுமே தேவை என்ற நிலையில், 18ஆவது ஓவரை வீசிய ஈஷான் மலிங்கா ஒர் ஓட்டம் மட்டுமே விட்டுக்கொடுத்து ஹர்திக் பாண்டியா மற்றும் நமன் திர் ஆகிய இருவரின் விக்கெட்களையும் வீழ்த்தினர்.

இதையடுத்து 19ஆவது ஓவரின் முதல் பந்தில், சீஷன் அன்சாரி வீசிய பந்தை திலக் வர்மா பௌண்ட்ரிக்கு விரட்டினார்.

இறுதியில் 18.1 ஓவர்களில் மும்பை அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 166 ஓட்டங்கள் எடுத்து, 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஹைதராபாத் அணியில் சார்பில் பட் கம்மின்ஸ் 3 விக்கெட்களும், ஈஷான் மலிங்கா 2 விக்கெட்களும் வீழ்த்தினர். (எ)





## அதிவேகமாக 1000 ஓட்டம் ட்ராவிஸ் ஹெட் சாதனை

மும்பை, ஏப். 19

அதிவேகமாக 1000 ஓட்டங்களை எட்டிய 2ஆவது வீரர் என்ற சாதனையை ட்ராவிஸ் ஹெட் படைத்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின. இந்த போட்டியில் ஹைதராபாத் வீரர் ட்ராவிஸ் ஹெட் 29 பந்துகளில் 28 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்தப் போட்டியில் ஹெட் 28 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் 1000 ஓட்டங்களை கடந்துள்ளார். இதில் அவர் சாதனை ஒன்றையும் படைத்துள்ளார். அதாவது, ஐ.பி.எல். தொடரில் குறைந்த பந்தில் 1000 ஓட்டங்களை கடந்த 2ஆவது வீரர் என்ற சாதனையை ட்ராவிஸ் ஹெட் (575 பந்துகள்) படைத்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் குறைந்த பந்தில் 1000 ஓட்டங்களை கடந்தவர்கள் பட்டியல் வருமாறு,

அண்ட்ரே ரசல் - 545 பந்துகள்,
ட்ராவிஸ் ஹெட் - 575 பந்துகள்,
ஹென்றிச் கிளாசென் - 594 பந்துகள்,
விரேந்திர சேவாக் - 604 பந்துகள்,
க்ளென் மக்ஸ்வெல் - 610 பந்துகள்,
கிறிஸ் கெயில் - 615 பந்துகள்,
யூசுப் பதான் - 617 பந்துகள்,
சுனில் நரேன் - 617 பந்துகள் (எ)

## ஒலிம்பிக்கில் கிரிக்கெட்

லொஸ் ஏஞ்சல்ஸ், ஏப். 19

ஒலிம்பிக்கில் கிரிக்கெட் போட்டி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.2028ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி அமெரிக்கா வின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெறவுள்ளது. இந்த ஒலிம்பிக் தொடரில் கிரிக்கெட் போட்டியை இணைக்க பரிந்துரைக்கப்பட்டிருந்தது. உலகின் மிகப்பெரிய விளையாட்டுப் போட்டியான ஒலிம்பிக்கில் கிரிக் கெட்டை சேர்க்க வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது.

கடைசியாக 1900ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் மட்டும் கிரிக்கெட் இடம் பிடித்தது. அதன் பிறகு நூற்றாண்டு கால முயற்சிக்கு ஒரு வழியாக 2023ஆம் ஆண்டு வெற்றி கிடைத்தது.இதன்படி 2028இல் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரில் 128 ஆண்டுகளுக்கு பிறகு கிரிக்கெட் உட்பட 5 விளையாட்டுகள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளதாக லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் ஒருங்கிணைப்பு குழு அறி வித்துள்ளது.

இந்த கிரிக்கெட் போட்டி அணி 6 அணிகள் பங்கேற்கும் ரி - 20 வடிவில் நடத்தப்படவுள்ளது. மற்ற போட்டிகளை போலவே ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக நடத்தப்படவுள்ளது. இருப்பினும் அந்த 6 அணிகள் எவ்வாறு தீர்மானிக்கப்படும் என்பது குறித்து அறிவிப்பு வெளிவரவில்லை.

இந்த நிலையில் இந்த கிரிக்கெட் போட்டி நடைபெறும் இடம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி தெற்கு கலிபோர்னியாவின் பொமோனாவில் உள்ள பேர்கிரவுண்ட்ஸ், என்ற இடத்தில் கிரிக்கெட் போட்டி நடைபெறும் என்று லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் குழு அறிவித்துள்ளது. (எ)

## மாபெரும் சாதனை பட்டியலில் இணைந்தார் ரோஹித் சர்மா



மும்பை, ஏப். 19

விராட் கோலி, கிறீஸ் கெயில், ஏபிடி வில்லியர்ஸ் உடன் மாபெரும் சாதனை பட்டியலில் இணைந்துள்ளார் ரோஹித் சர்மா.ஐ.பி.எல். தொடரில் மும்பை வான்கடே மைதானத் தில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் மும்பையின் அணியின் இம்பேக்ட் வீரராக களமிறங்கிய ரோஹித் சர்மா 16 பந்துகளில் 26 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமி ழந்தார்.

இதில் அவர் 3 சிக்ஸர்கள் அடித்தார். இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட மைதானத்தில் 100 சிக்ஸர்கள் விளாசிய வீரர்கள் பட்டியலில் ரோஹித் சர்மா இணைந்துள்ளார். இந்த பட்டியலில் விராட் கோலி, கிறிஸ் கெயில், ஏபிடி வில்லியர்ஸ் ஆகியோர் முதல் 3 இடங்களில் உள்ளனர்.

ஒரு குறிப்பிட்ட மைதானத்தில் 100 சிக்ஸர்களுக்கு மேல் விளாசிய வீரர்கள் பட்டியல் வருமாறு, பெங்களூரு சின்னசாமி மைதானம், விராட் கோலி -130 சிக்ஸர்கள், கிறிஸ் கெயில் - 127 சிக்ஸர்கள், ஏபிடி வில்லியர்ஸ் - 118 சிக்ஸர்கள்,ரோஹித் சர்மா - வான்கடே மைதானம், மும்பை - 102 சிக்ஸர்கள் (எ)

## பார்சிலோனா ரென்னிஸ் காலிறுதிக்குள் கார்லஸ்

மட்ரிட், ஏப். 19

பார்சிலோனா ஓபின் ரென்னிஸ் போட்டித் தொடர் காலிறுதிக்கு கார்லஸ் அல்காரஸ் முன்னேறியுள்ளார்.

ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் பார்சிலோனா ஓபின் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான ரென்னிஸ் தொடரில் முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ளனர். கடந்த 12ஆம் திகதி தொடங்கிய இந்தத் தொடர் நாளை 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்று ஆட்டத்தில் ஸ்பெயின் முன்னணி வீரர் கார்லஸ் அல்காரஸ், செர்பியா வீரர் லாஸ்லோ ஜெரேவுடன் நேற்று மோதினார். இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய கார்லஸ் அல்காரஸ் 6-2, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையானின்...

90 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்கப்படுகிறார். இந்த நிலையிலேயே பிள்ளையானின் சாரதியான ஜெயந்தன் கைதுசெய்யப் பட்டார். கைதான ஜெயந்தன் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என்று அறிய வருகிறது. (ஐ)

## தேர்தல்கள்...

நேற்றுமுன்தினம் மன்னாரில் பிரசார கூட்டத்தில் பங்கேற்ற ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கே விசேட நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்ற ரீதியில் கருத்து வெளியிட்டிருந்தார்.

அவரின் இந்த கருத்துகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டன. இந்த நிலையில், இந்த முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து விசாரணை நடத்துவதற்காகவே நாளைமறுதினம் தேர்தல்கள் ஆணைக் குழு கூடவுள்ளதாக அறிய வருகிறது. (ஐ)

## தமிழ்...

கூறினார்.

மேலும், இன வாதத்துக்கு இடமில்லை என்று கூறும் அநுர அரசே தையிட்டி விகாரையின் கட்டுமானத்துக்கு முக்கிய காரணமாக இருந்தது. இவர்களே அன்று இந்த திஸ்ஸ விகாரையின் கட்டுமானம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் குறித்த பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்த போது விகாரையை அமைக்கும் நடவடிக்கைக்கு யாழ்ப்பாண தமிழர்கள் மதவாதம் பேசுவதாகக்கூறி சிங்கள மக்களை திசை திருப்பி விகாரையை கட்டிமுடிக்கச் செய்திருந்தனர்.

ஆனால், இன்று குத்துக்கரணம் அடித்து மக்களை ஏமாற்றி எமது மக்களின் நலன்களை முன்னிறுத்தி போராடும் தமிழ் அரசியல் கட்சிகள்மீது குறிப்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணிமீது குற்றச்சாட்டை சுமத்தி அரசியல் செய்கின்றனர்.

இனவாதத்தைத் தூண்டும் இந்த தேசிய மக்கள் சக்தி தமிழ் கட்சிகள்மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைக் கூறி அவர்களின் உச்சபட்ச இனவாதத்தின் வெளிப்பாட்டை காட்டுகின்றனர். முன்னைய ஜனாதிபதியான கோட்டாபயவுக்கு இரண்டு வருடம் தேவைப்பட்டது. அவரின் உண்மை முகத்தைக் காட்ட - ஆனால், ஜே. வி. பியின் உண்மையான முகம் 6 மாதங்களுக்குள் வெளிப்பட்டுவிட்டது. முன்னைய ஆட்சியாளர்கள் இனவாதத்தை வெளிப்படையாகவே காட்டினர். ஆனால், இவர்கள் அவர்களைவிட மோசமனவர்கள். மக்களை நம்பவைத்து தம்வசப்படுத்தி கழுத்தறுக்க முயற்சிக்கின்றனர்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிரசார மேடைகளில் ஜனாதிபதியின் பிரசார பேச்சுகள் தமிழ் மக்களின் இருப்பை சூட்சுமமாக இல்லா தொழிக்கும் நிகழ்ச்சி திட்டங்களை உள்ளடக்கியே முன்னெடுப்பதாக உள்ளது.

இது அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசின் அச்சுறுத்தும் அரசியல் போக்காகவே இருக்கிறது. மக்களின் ஆதரவை பெறுவதற்காக பல வாக்குறுதிகளை அள்ளி வழங்கிய அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் அந்த வாக்குறுதிகளுள் ஒன்றைக்கூட நிறைவேற்றாது மீண்டும் புதிய பல வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர். இது தமிழ் மக்களின் வாக்குகளை சூறையாடும் முயற்சியாக இருக்கிறதே தவிர தமிழ் மக்களின் நலன்களுக்கானதாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை. இதை எமது மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். அத்துடன் இதன் வெளிப்பாட்டை உள்ளூராட்சித் தேர்தலிலும் வெளிப்படுத்த வேண்டும்.

அந்தவகையில் தமக்கு வாக்களித்தால்தான் பிரதேச சபைகளுக்கு நிதி விடுவிக்கப்படும் என்ற ஜனாதிபதியின் கருத்தானது ஜனநாயக விரோதத்துக்கு இதைவிட வேறொரு உதாரணம் வேண்டுமா? - என்றும் கேட்டார். (ஐ)

## ஜனாதிபதி தன்...

தர்மலிங்கம் சித்தார்த்தன் குற்றஞ்சாட்டியுள்ளார். அத்துடன், இது தேர்தல் விதிமீற லாகும். இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மன்னாரில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்தார். இது தொடர்பில், சித்தார்த்தன் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இதுவரை காலமும் எந்தவொரு ஜனாதிபதியும் வெளியிடாத கருத்தை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வெளியிட்டிருப்பதாக சாடினார். ஜனாதிபதி என்பவர் இந்த நாட்டின் சகல பிரஜைகளுக்கும் பொதுவானவர். அத்தகைய முக்கிய பொறுப்பில் இருக்கும் நபர் இவ்வாறு கூறுவது கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

இதேபோன்று, உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடை பெறவிருக்கும் நிலையில், ஏனைய கட்சிகள் ஆட்சியமைக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய பலமுறை சிந்திப்போம் எனக் கூறுவது மக்களை அச்சுறுத்துகின்ற நடவடிக்கையாகும். ஜனாதிபதியின் இத்தகைய தேர்தல் விதிமீறல் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதுமாத்திரமின்றி ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் இந்த உரை மூலம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எவ்வாறு செயல்படும் என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

## இனங்களிடையே...

அடிப்படைவாத அமைப்பொன்று இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். அவ்வாறு அடிப்படைவாத அமைப்புகள் இருக்குமானால் அது தொடர்பாக பகிரங்க மேடைகளில் தெரிவித்துக்கொண்டிருக்காமல், அரசாங்கத்தின் பாதுகாப்பு பிரிவில் அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் பிரிவுகளுக்கு அறிவித்து, விசாரணை மேற்கொண்டு சட்டத்தை நிலைநாட்டுமாறு தெரிவிக்க வேண்டும்.

அவ்வாறில்லாமல் ராஜபக்ஷவினர் செயல்பட்டதுபோல், இந்த நாட்டில் அடிப்படைவாத அமைப்புகள் இருப்பதாக பகிரங்க மேடைகளில் தெரிவித்து இனங்களுக்கிடையில் சந்தேகத்தை ஏற்படுத்த வேண்டாம் என ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கிறோம்.

நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக தெரிவித்தே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால், ஜனாதிபதியின் இந்தக் கூற்று நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடியதல்ல.

மாறாக, ஜனாதிபதியின் இந்தக்கூற்று இனங்களுக்கிடையில் சந்தேகம், நம்பகத்தன்மையை இல்லாமல் செய்யும் விடயமாகும். ராஜபக்ஷவினரும் கடந்த காலங்களில் இவ்வாறான பேச்சுகளை பகிரங்க மேடைகளில் பேசி, நாட்டில் இனங்களுக்கிடையில் பெரும் மோதல்களை ஏற்படுத்தி இருந்தார்கள்.

அதனால், ஏதாவது அடிப்படைவாத அமைப்புகள் நாட்டில் இருக்குமானால் அது வடக்கிலா. கிழக்கிலா, மேற்கிலா, தெற்கிலா என்பதில் பிரச்னை இல்லை. அவர்களுக்கு எதிராக உடனடியாக சட்டத்தை நிலைநாட்டுமாறு ஜனாதிபதி தனக்கு கீழ் இருக்கும் பொலிஸாருக்கு, இராணுவத்தினருக்கு அறிவிக்கவேண்டும். அவ்வாறில்லாமல் ஜனாதிபதி மக்கள் கூட்டங்களுக்கு சென்று, அடிப்படைவாத அமைப்புகள் இருக்கின்றன என்று பிரசாரம் செய்வது அதற்கான பதில் அல்ல.

ஜனாதிபதி தொடர்ந்தும் அதனைத் தெரிவித்து வருவாரானால், அவருக்குள் வேறு நிகழ்ச்சிநிரல் இருக்க வேண்டும் என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. அதனால் இந்த நாட்டில் சந்தேகம், நம்பிக்கையற்ற, வெறுப்பூட்டும் பிர சாரங்களை மீண்டும் மேற்கொள்ள வேண் டாம் என்று கேட்டுக்கொள்கிறோம் - என்றார். (ஐ)

# தலதா மாளிகை கண்காட்சி; விசேட இணையம் அறிமுகம்

கொழும்பு, ஏப். 19

சிறீ தலதா மாளிகையில் புனித தந்த தாதுவை வழிபட வரும் பக்தர்களின் வசதி கருதி, சேவைகளை வழங்குவதற்காக daladadekma.police.lk என்ற பிரத்தியேக இணையத்தளத்தை இலங்கை பொலிஸ் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

புனித தந்த தாதுவை வழிபடுவதற்கு வருகை தரும் பக்தர்களுக்கு சீரான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட தகவல்களையும் ஆதரவையும் வழங்கும் நோக்கில் இந்த இணையத்தளம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

போக்குவரத்து நிலைமைகள் தொடர்பிலான தகவல்கள் , புனித யாத்திரை பாதைகளின் விரிவான வரைபடங்கள் மற்றும் பார்வையாளர்களுக்கான வழிகாட்டுதல்கள், வாகனத் தரிப்பிட வசதிகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை இந்த இணையத்தளம் ஊடாக அறிந்து கொள்ள முடியும்.

புனித தந்த தாதுவை வழிபடவரும் பக்தர்களின் பயணத்தை மிகவும் பாதுகாப்பானதாகவும் அசௌகரியங்கள் இல்லாததாக மாற்றுவதற்கும், யாத்திரிகர்களுக்கான முக்கியமான பாதுகாப்பு உதவிக்குறிப்புகள் மற்றும் அவசர தொடர்பு தகவல்களையும் இந்த இணையத்தளம் ஊடாக அணுக முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஜனாதிபதி...

கூறியுள்ளார் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி. அவரே பயங்கரவாதி சஹ்ரான் உட்பட அவரின் குழுவுக்கு இரண்டாம் பிரதானியாக செயல்பட்டார். 11 விசாரணை அறிக்கைகளில் இல்லாத புதிய விடயத்தை ஜனாதிபதி குறிப்பிடுவதை நாங்களும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அரசியல் நோக்கத்துக்காக குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று எந்த விசாரணை அறிக்கையிலும் குறிப்பிடப்படவில்லை. பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஏமாற்றப்பட்டதையிட்டு கவலையடைகிறோம் என முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலுக்கு முன்னர் பிரதான பொறுப்புதாரிகளை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த இரண்டு நாட்களில் ஜனாதிபதி எதைச் சொல்ல போகிறார் என்பதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இதேபோல் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி தேவாலயத்தில் வைத்து பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு, குண்டுத்தாக்குதலில் பிரதான சூத்திரதாரியை ஏப்ரல் 21 தினத்துக்கு முன்னர் பகிரங்கப்படுத்துவதாக வாக்குறுதியளித்தார்.

குண்டுத்தாக்குதலில் பிரதான சூத்திரதாரியை அறிவிக்காவிடின் ஏப்ரல் 21 தினத்துக்கு பின்னர் அரசாங்கத்துக்கு எதிராக வீதிக்கு இறங்குவதாக பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்தார். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு பேராயர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் தேசிய மட்டத்தில் 7 விசாரணைகளும் சர்வதேச மட்டத்தில் 4 விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டன. எந்த விசாரணைகளிலும் பிரதான சூத்திரதாரி யாரென்பது குறிப்பிடப்படவில்லை. இந்த விசாரணைகளில் குறிப்பிடப்படாத விடயங்களையா ஜனாதிபதி இந்த இரு தினங்களில் குறிப்பிடப் போகிறார் என்பதை பார்த்துக் கொண்டிக்கிறோம்.

ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி அவ்வாறு குறிப்பிட்டிருந்தால் அது பேராயரை ஏமாற்றும் ஒரு செயல்பாடாகும். அது பாதிக்கப்பட்டவர்களுக்கு இழைக்கும் பெரும் அநீதியாகும் என்றும் கூறினார். (ஐ)

## தந்தை...

என்ற குழந்தையே உயிரிழந்தது.

சம்பவ இடத்துக்கு நேரில் சென்ற கிளிநொச்சி மாவட்ட பதில் நீதிவான் எஸ். சிவபாலசுப்ரமணியம் உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் குழந்தையின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

## நிதி ஒதுக்கீடு...

இந்தக் கூற்றை தமிழ் மக்கள் ஒரு நல்ல சகுனமாகக் கருதமுடியும். ஏனெனில் வட, கிழக்கு மாகாணங்களின் உள்ளூராட்சி மன்றங்களில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி உள்ளடங்கலாக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள்தான் ஆட்சியமைக்கும். அவ்வாறிருக்கையில், இங்குள்ள உளளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீட்டை வழங்கமுடியாது என அரசாங்கம் கூறுமேயானால், எமக்கான தனிநாட்டை பிரித்துத் தருவதற்கான தீர்மானத்தை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். இல்லாவிடின் அதனை முன்னிறுத்தி நாம் பொதுஜன வாக்கெடுப்பு ஒன்றுக்குத் தயாராவோம். ஆகவே, நாம் தென்னிலங்கையுடன் இணைந்து பயணிப்பதா அல்லது பிரிந்து செல்வதா என்பதை தீர்மானிப்பதற்கான கதவொன்றை தற்போது ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க திறந்துவிட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

ஜனாதிபதியாக அநுர குமார தெரிவாகி, புதிய அரசாங்கம் அமைந்து 6 மாதங்கள் கடந்து விட்டன. இந்த நிலையில், தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றுகூட இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

தமிழ் அரசியல் கைதிகளில் ஒருவர் கூட விடுதலை செய்யப்படவில்லை. வீதிகள் புனரமைக்கப்படவில்லை. மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தொழிற்சாலைகள் நிறுவப்படவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டைப் பொறுத்தமட்டில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிமுகப்படுத்திய நடவடிக்கைகளையே இவர்கள் தொடர்ந்து முன்னெடுக்கிறார்கள். புதிய அரசாங்கத்திடம் சிறந்த பொருளாதார கொள்கையோ, முன்நோக்கிப் பயணிப்பதற்காக திட்டமிடலோ, உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகளோ இல்லை.

அவ்வாறிருக்கையில் நாம் காணிகளை விடுவிப்போம், வீதிகளை புனரமைப்போம் என்று ஜனாதிபதி கூறுவதெல்லாம் மக்களை ஏமாற்றுவதற்கான உத்தியின் ஒரு வடிவமேயாகும். மாறாக அவரும் ஏனைய சிங்களத் தலைவர்களைப்போல தன்னை ஒரு சிங்கள தேசியத் தலைவராகவே அடையாளப்படுத்துகிறார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## புதிய அரசமைப்பொன்று வருமென வடக்கு-கிழக்கு மக்கள் நம்பிக்கை!

### அதனை உடன் முன்னெடுக்குமாறு அரசிடம் கரு ஜயசூரிய வலியுறுத்து

கொழும்பு, ஏப். 19

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் வாக்குறுதியளிக்கப்பட்டமைக்கு அமைவாக புதிய அரசியலமைப்பொன்று கொண்டுவரப்படும் என வடக்கு, கிழக்கு மக்கள் நம்பிக்கையுடன் இருக்கின்றனர். எனவே தற்போது இதனைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான திட்டமும், தெளிவான காலவரையறையுமே அவசியமானதாக இருக்கின்றன என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

ஐரோப்பிய ஒன்றியத்தினால் நாட்டுக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்வதற்கு எவ்வித அரசியல் வேறுபாடுகளுமின்றி சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வரிச்சலுகை வழங்கல் குறித்த மீளாய்வுக்காக ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவினர் நாட்டுக்கு வருகை தரவுள்ள நிலையில், பயங்கரவாதத்தடைச்சட்டம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் ஆகிய விடயங்களில் அரசாங்கம் நம்பத்தகுந்த முன்னேற்றத்தைக் காண்பிக்கவேண்டும்.

பயங்கரவாதத்தடைச்சட்டம் தவறான முறையில் பிரயோகிக்கப்படுவதாகவும், அதனூடாக அத்துமீறல்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தற்போது நீதியமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ள குழு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளாய்வு செய்து வருகிறது. அக்குழுவின் பரிந்துரைகள் எவ்வித தாமதமுமின்றி உடனடியாக அமுல்படுத்தப்படவேண்டும் என்பதுடன், இவ்விடயம் தொடர்பில் பரந்துபட்டதும், சகலரையும் உள்ளடக்கியதுமான பொதுக்கலந்துரையாடல் ஆரம்பிக்கப்படவேண்டும்.

அதேபோன்று 2024 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நிகழ்நிலைக்காப்பு சட்டமும் ஊடகவியலாளர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கடும் எதிர்ப்புக்கு உள்ளானது. இச்சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட சில தீர்மானங்கள் இலங்கையின் நன்மதிப்பை மேலும் சிதைத்தது. இவ்வாறான கரிசனைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும்போது அரசியல் தன்முனைப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை என்பன பேணப்படுவது அவசியமாகும்.

அதேபோன்று தேர்தல் பிரசாரத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் வாக்குறுதியளிக்கப்பட்டமைக்கு அமைவாக புதிய அரசியலமைப்பொன்று கொண்டுவரப்படும் என வடக்கு, கிழக்கு மக்கள் நம்பிக்கையுடன் இருக்கின்றனர்.

இவ்விடயத்தில் அநேகமான நடவடிக்கைகள் எட்டாவது பாராளுமன்றத்திலேயே பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. குறுகிய காலத்தில் அடையப்படக்கூடிய விடயங்கள் மாத்திரமே எஞ்சியிருக்கின்றன. எனவே தற்போது இதனைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான திட்டமும், தெளிவான காலவரையறையுமே அவசியமானதாக இருக்கின்றன. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தப்படவேண்டும்-என்று கூறியுள்ளார். (அ)

## இவ்வருட வாகன விபத்துகளில் இதுவரை 713 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 19

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 713 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த உயிரிழப்புக்கள் 685 விபத்துக்களில் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.எவ்வாறாயினும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் 31 வாகன விபத்துக்கள் குறைவாகப் பதிவாகியுள்ளன.


இதற்கமைய கடந்த ஆண்டில் குறித்த காலப்பகுதிக்குள், 713 வாகன விபத்துக்களில் 744 பேர் உயிரிழந்தனர்.

பண்டிகைக் காலத்தில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 105 பேர் உயிரிழந்துள்ளனர். 103 விபத்துக்களில் இந்த உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன.குறித்த காலப்பகுதிக்குள் 934 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இலங்கை - இந்தியா தரைவழியை தொடர விரும்பாத அநுரவின் அரசு!

கொழும்பு, ஏப். 19

**அண்மையில் இலங்கை விஜயம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இருதரப்பு பேச்சுவார்த்தைகளின்போது சில கருத்துக்களை தெரிவித்த போதிலும், இந்த நேரத்தில் இந்தியாவுடன் நில இணைப்புத் திட்டத்தைப் பரிசீலிக்க இலங்கை மறுத்துவிட்டது என்று தகவல் வெளியாகியுள்ளது.**



2002 முதல் 2004 ஆம் ஆண்டு வரை அப்போதைய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின்போது இரு நாடுகளையும் இணைக்கும் நிலப் பாலம் முதலில் விவாதிக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டு விக்கிரமசிங்க ஜனாதிபதியாக புதுடில்லிக்கு விஜயம் செய்தபோது, கூட்டு அறிக்கையில் நில இணைப்பு குறிப்பிடப்பட்டது.

இருப்பினும், கடந்த ஆண்டு டிசெம்பரில் புதுடில்லிக்கு விஜயம் செய்தபோது, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, இந்த நேரத்தில் இந்தத் திட்டத்தைத் தொடர மறுத்துவிட்டார் என்று பல ஆதாரங்களை மேற்கோளிட்டு தகவல் வெளியாகியுள்ளது.

இதன் விளைவாக, சமீபத்தில் இந்தியப் பிரதமரின் வருகையின்போது இந்த விடயம் இலங்கை நிகழ்ச்சி நிரலில் இல்லை.

இருப்பினும், ஒரு சந்தர்ப்பத்தில் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளின்போது, பிரதமர் மோடி இரு நாடுகளுக்கும் இடையிலான நில இணைப்பு பற்றி குறிப்பிட்டார்.

விஜயத்துக்குப் பிறகு அவர் இலங்கையிலிருந்து இந்திய விமானப்படை ஹெலிகொப்டரில் பறந்தபோது, பண்டைய காலங்களில் இலங்கையையும் இந்தியாவையும் இணைத்த இராமர் பாலத்தை அவர் கவனித்தார். (அ)

## தலதா மாளிகையில் ஜனாதிபதி வழிபாடு!

கொழும்பு, ஏப். 19

தலதா வழிபாட்டின் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று கலந்து கொண்டார்.

கண்டி தலதா மாளிகையில் உள்ள புத்த பகவானின் புனித தந்த தாதுவை நேரடியாக வழிபடுவதற்கான சந்தர்ப்பம் நேற்று தொடக்கம் எதிர்வரும் 10 நாட்களுக்கு பக்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுமார் 16 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.இந்நிலையில் தலதா வழிபாட்டின் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் கலந்து கொண்டார்.ஜனாதிபதி அநுர குமாரவுடன், பல்வேறு நாடுக ளைச் சேர்ந்த தூதுவர்கள் மற்றும் இராஜதந்தி ரிகளும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நாளான நேற்று பிற்பகல் 3.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரையிலும், பக்தர்களுக்கு புனித தந்த தாதுவை வழிபடுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. (அ)

## இரு இளைஞர்கள் கஞ்சாவுடன் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாணம் - தட்டாதெரு சந்தியில் வைத்து 52 கிராம் கஞ்சாவுடன் இரண்டு இளைஞர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## ஆளும் கட்சி பிரதேச அபிவிருத்தியில் கட்டாயம் கவனம் செலுத்த வேண்டும்

### வவுனியா வைத்தியசாலை குளிரூட்டி பழுது தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் கருத்து

வவுனியா, ஏப். 19

ஆளுங்கட்சியை சேர்ந்த பிரதி அமைச்சர் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் வன்னிப் பிரதேசத்தில் இருந்தபோதிலும் வவுனியா வைத்தியசாலையில் பல நாட்களாக இயங்காமல் இருக்கின்ற பிரேத அறையின் குளிரூட்டியைச் சீர்செய்வது தொடர்பில் சுகாதார அமைச்சின் கவனத்துக்கு கொண்டு செல்லாமை கவலைக்குரிய விடயம் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையின் குளிரூட்டி பல மாதங்களாகச் செயல்படாமல் காணப்படுகின்றது. இதன் காரணமாக மரணமடைந்தவர்களின் உறவினர்கள் தமது சொந்த செலவில் சடலத்தைச் செட்டிகுளம் வைத்தியசாலையின் குளிரூட்டியில் வைத்து மீண்டும் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையை ஏற்பட்டுள்ளது.

பல ஆயிரக்கணக்கான பணத்தைச் செலவழித்து சடலத்தை செட்டிகுளத்துக்கும் வவுனியாவுக்கும் கொண்டு செல்ல வேண்டிய நிலைமை உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு ஏற்படுகின்றது.

இது இந்த பிரதேச மக்களுக்கு பாரிய சுமையை ஏற்படுத்தும் ஒரு செயற்பாடாகும்.தமது ஆட்சியில் பாலும் தேனும் ஓடும் என்று அறிக்கை விட்டு மக்களைப் பொய்யாக திசை திருப்பி பிரதி அமைச்சுக்களையும் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் பெற்றுக் கொண்ட தேசிய மக்கள் சக்தியினர் வெறும் வாய்ச்சவால் விடுவதற்கு மாத்திரமே சிறப்பானவர்களாக காணப்படுகின்றனர்.

தமது பிரதேசத்தில் இவ்வாறான ஒரு நிலைமை காணப்படுவது தொடர்பில் அறிந்து கொள்ளவோ அதற்கான நடவடிக்கையை தமது ஆட்சியில் உள்ள சுகாதார அமைச்சருடன் கதைத்து செயற்படுத்தவோ எவ்வித நடவடிக்கையும் எடுக்காதவர்கள் தான் மீண்டும் மக்களிடம் பொய்களைக் கூறி திசை திருப்ப முயன்று கொண்டிருக்கிறார்கள்.

தற்போதைய அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை மாத்திரமல்ல தமது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களைக்கூட கேட்பதற்கு தயாரில்லை என்பதற்கு தேசிய மக்கள் சக்தியின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கே சாட்சியாகவுள்ளனர்.

இது மாத்திரமன்றி வவுனியா வைத்தியசாலையில் கோலாகலமாக திறக்கப்பட்ட இருதய சிகிச்சைப் பிரிவு இதுவரை செயற்படுத்தப்பட முடியாமல் வைத்திய நிபுணர்கள் இன்றி மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இது தொடர்பிலும் அவர்கள் அக்கறை எடுத்ததாகத் தெரியவில்லை.

எமது கருத்துக்களை கேட்கக்கூட தயாராக இல்லாத இந்த அரசாங்கம் தாமாவது தங்களது பிரதேசத்தில் தேவைகளை அறிந்து செயல்படுத்த முன்வர வேண்டும்-என்று கூறியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.